AHARAM

# அகரம்

எண்: 11 எழுத்து: 08 ஆகஸ்ட் - 2017 | ஷவ்வால் 1438



## டெங்கு அற்ற இலங்கை தேசத்தை நோக்கி...

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

www.aharam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பத்து ஆண்டுகளில் இன்னும் 100 கோடிப் பேர்

ஜூலை 11 உலக சனத்தொகை தினமாகும். கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்லும் உலக சனத்தொகை பற்றிய அறிவுறுத்தல்களை வழங்க இத்தினம் ஐ.நா. சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய உலக சனத்தொகை 760 கோடியாகும். இதில் 134 கோடி சனத்தொகையைக் கொண்டிருக்கும் இந்தியா, இன்னும் ஏழு ஆண்டுகளில் (2024) சீனாவைக் கடந்து முதலிடத்தைப் பிடிக்கும் என அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.




1990 – 530 கோடி

2017 – 760 கோடி

2030 – 860 கோடி

2050 – 980 கோடி

என உலக சனத்தொகையின் வளர்ச்சி வீதம் காட்டப்பட்டுள்ளது.


2100 ஆம் ஆண்டில் உலகம் சந்திக்கப் போகும் மிகப் பெரும் சவாலாக முதியோரை பராமரித்தல் காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. அப்போது உலகம் முழுவதும் 360 பேர் 60 வயதை கடந்தவர்களாக இருப்பார்கள் என கூறப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் முக்கிய 23 நாடுகளின் சனத்தொகை 2050 ஆம் ஆண்டுக்குள் இரட்டிப்பாகிவிடும் என அறிக்கைகள் அலறுகின்றன.


2050 ஆம் ஆண்டு உலக சனத்தொகையில் பாதியை பத்து நாடுகள் கொண்டிருக்கும். இந்தியா, சீனா, நைஜீரியா, கொங்கோ, பாகிஸ்தான், எத்தியோப்பியா, தன்சானியா, அமேரிக்கா, உகான்டா, இந்தோனேஷியா என்பவையே அந்த நாடுகளாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இதயம் துடிப்பது நின்றுவிட்டால் அதைத்தான் மரணம் என்று பொதுவாக நாம் நம்புகின்றோம். ஆனால், மருத்துவ அறிவியலின்படி மரணம் என்பது உடலிலுள்ள உயிர்க் கலங்களின் இயக்கமின்மை என்று வரையறுக்கப்படுகின்றது.**











AHARAM அகரம்

எண்: 11 - ஆகஸ்ட் : 2017 - எழுத்து: 8






**ஆசிரியர்**
**எம். றிஸ்வி ஸுபைர் M.Ed**

**ஆலோசனைக் குழு**

**அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)**
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

**எம்.எச். எம். ஹஸன் M.Ed**
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

**ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd**

**அன்பு ஜவஹர்ஷா**
(ஓய்வு பெற்ற அதிபர்)

**துணை ஆசிரியர்**
**வ. முஹம்மத் நபீல்**

**தளக் கோலம்**
**எம்.ஐ.எம். ஹரீஸ்**


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 20 |
| அரபு மொழி | 14 |





36


**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 741 2561**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் சுத்தம் பேணுவோம்

இயற்கையின் ஒவ்வொரு பொருளும் ஒவ்வோர் உயிரியும் பரஸ்பரம் ஒன்றோடொன்று இணைந்து செயற்படுகின்றது. மனிதனும் அவனது வாழ்வும் இந்த இயற்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்டே காணப்படுகின்றன. அவனால் ஒரு கணப்பொழுதும் இதனை விட்டு விலகி வாழ முடியாது. சூழல் பல இயற்கைச் சமநிலைகளால் இயங்குகிறது. இஸ்லாம் சூழலை மனிதனது எதிரியாக நோக்கவில்லை. அது மனிதனுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள பெரும் அருளாக கருதுகிறது.

மனிதன் உடல் ஆரோக்கியமானவனாக வாழ வேண்டுமென்றால் நிச்சயமாக தான் சுத்தமாக இருப்பதுடன், தனது சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய தேவை அவனுக்குள்ளது. இஸ்லாம் சுத்தத்தை அடிப்படையான நம்பிக்கைகளில் ஒன்றாகக் கொண்டுள்ள மார்க்கமாகும். சுத்தத்தை ஈமானின் பாதி எனக் குறிப்பிடுகிறது. இஸ்லாமே இறை நம்பிக்கைக்கும் சுத்தத்திற்குமிடையிலே நேரடியான தொடர்பினை ஏற்படுத்துகின்றது. நிச்சயமாக ஒரு முஸ்லிம் தூய்மையற்ற நிலையில் இறைவனை வணங்க முடியாது என வலியுறுத்துகிறது.

பாதை ஒன்றிலிருக்கும் ஒரு முள்ளினை அகற்றுவதைக் கூட இஸ்லாம் எமக்கு தர்மமாக சொல்லித் தருகின்றது. சூழலை மாசடையச் செய்கின்ற பல செயல்களை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடுத்திருக்கின்றார்கள். ஓடாத நீரில் சிறுநீர் கழிப்பது தடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் குளிக்கின்ற இடங்களில் சிறுநீர் கழிப்பதைக் கூட இஸ்லாம் தடுத்துள்ளது. இன்னொரு மனிதனுக்கு தெரிந்து கொண்டே தீங்கிளைக்கின்ற மனிதன் ஒரு சிறந்த முஸ்லிமாக இருக்க முடியாது. பாதையிலும் மனிதர்கள் ஓய்வெடுக்கின்ற நிழல் பகுதிகளிலும் மலம் கழிப்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தடுத்திருக்கின்றார்கள். இவையெல்லாம் இஸ்லாம் சுற்றுச் சூழலை எந்தளவு தூய்மையாக பேணச் சொல்கின்றது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும். அவ்வாறே, சூழலை வளப்படுத்தல், செழுமைப்படுத்தலை மனிதனின் மிக முக்கிய கடமையாக இஸ்லாம் கருதுகிறது. மறுமை நாள் மறுகணம் வரும் என்ற நிலையிலும் தம் கரத்தில் இருக்கும் செடியை நட்டு விடுமாறு இறைத்தூதர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது நாம் சூழலை வளப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவதற்கு சிறந்த சான்றாகும்.

எனினும், அண்மைக் காலமாக எமது நாட்டில் பரவி வரும் டெங்கு நோயின் தீவிரத்தைப் பார்க்கின்றபோது, நாம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பராமரிப்பில் பொடுபோக்காக இருப்பது தெரிகிறது. இது பெரும் வேதனைக்குரிய விடயமாகும். டெங்கு நோயினை பரப்பும் நுளம்பின் உருவாக்கம் சூழல் மாசடைவதன் விளைவாகவே ஏற்படுகிறது. இந்நோயின் அகோரத்தால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வேதனையால் துவண்டு போயுள்ளனர். இவ்வருடத்தின் ஜுன் மாதம் வரையில் மொத்தம் 80203 பேர் டெங்கு தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதுடன் 225 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, நாம் எமது வீடு, வகுப்பறை, பாடசாலை, ஊர் ஆகிய சூழல் விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டியது அவசர தேவையாக இருக்கிறது. தான் மட்டும் சுத்தமாயிருந்தால் போதாது தனது சூழலும் சுத்தமாயிருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தாலே பல சூழல்சார்ந்த பிரச்சினைகளுக்கும் பல தொற்று நோய்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ்
## பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஸஈத் அல்குத்ரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், உலகம் இனிமையானதும் பசுமையானதுமாகும். நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதை பார்ப்பதற்கே உலகில் அல்லாஹ் உங்களை பிரதிநிதியாக படைத்துள்ளான். உலகத்தையும் பெண்களையும் பயந்து (தக்வாவுடன்) நடந்து கொள்ளுங்கள். பனூ இஸ்ரவேலர்களின் முதல் குழப்பம் பெண்களால்தான் உருவாகியது. (முஸ்லிம்)

புனிதமிகு ரமழான் எம்மிடத்தில் ஏற்படுத்திச் சென்றுள்ள மிகப் பெரும் அருளே அல்லாஹ்வை பயந்து, அவன் நினைவில் வாழ்கின்ற தன்மையாகும். இந்த இறையுணர்வு அல்லது தக்வா ஒவ்வொரு மனிதனிலும் எப்போதும் இருக்க வேண்டியது கட்டாயம்.

அல்லாஹ் அல்குர்ஆனில் சுவனத்தைப் பற்றியும் அதன் சுகங்கள் பற்றியும் எடுத்துரைக்கும் இடங்களிலெல்லாம், அந்த கண்கவர் சுவனம் தக்வாவுடன் வாழ்கின்ற மனிதர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றான்.

மறுமையில் அல்லாஹ்விடம் மகத்தான வெற்றியைப் பெறுவோர் உலகில் அல்லாஹ்வை, மறுமையை அஞ்சி வாழ்கின்றவர்கள்தான். மேலும் தக்வாவுடையோருக்கு அல்லாஹ் இவ்வுலகில் வழங்குகின்ற மிகப் பெரும் பாக்கியம் அல்குர்ஆனின் வழிகாட்டல் கிடைக்கின்றமை.

''அலிப் லாம் மீம். இதுதான் வேதமாகும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை. இது தக்வா உடையவர்களுக்கு நேர்வழிகாட்டியாக உள்ளது.'' (பகறா: 1,2)

இத்தகைய பெரும் பாக்கியங்களுக்கு தகுதியான ஒருவரையே நோன்பு உருவாக்குகின்றது. ரமழானில் ஒருவர் பெற்ற இறையச்ச உணர்வு ஏனைய காலங்களில் அவரின் உள்ளத்தை ஆட்சி செய்ய வேண்டும்.

நாம் தக்வா என்பது அல்லாஹ்வுக்கும் மறுமைக்கும் அஞ்சி ஒரு பாவத்திலிருந்து விடுபடுவதும் ஒரு நன்மையை செய்து விடுவதும் என்றே அறிந்து வைத்துள்ளோம். ஆனால், இங்கு நாம் பயப்பட வேண்டிய அல்லது எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மேலும் இரு விடயங்களை நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவைதான் உலக விவகாரங்கள் மற்றும் பெண்களுடைய விவகாரங்கள்.

இங்கு பயந்து கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ள இரு விடயங்களுமே அல்லாஹ், மறுமை, அல்குர்ஆன் பற்றிய சிந்தனைகளை விட்டும் மனிதனை தூரப்படுத்தி அவனை நெறிபிறழச் செய்பவை. எனவேதான், நபியவர்கள் இவ்விரண்டு விடயங்களிலும் மிக எச்சரிக்கையாக இருக்குமாறு பணித்தார்கள்.

உலகம் மிகவும் விசாலமானதும், பெண்கள் போன்ற சில அலங்காரங்களைக் கொண்டு அழகு படுத்தப்பட்டதுமாகும். மனிதன் உலக வாழ்வில் அவ்வப்போது சில இடங்களையும் சந்தர்ப்பங்களையும் கண்டுகொள்ளும்போது ஈமானில் பலவினமுற்று, தக்வா நிலையிலிருந்து விலகி பாவத்தின் பால் ஈர்க்கப்பட்டு விடுகின்றான்.

அது நாம் தனிமையாக, குடும்பத்துடன் அல்லது சமூகத்துடன் என எச்சந்தர்ப்பத்தில் இருந்தாலும் சரியே. நாம் எத்தனை பேர் எங்கிருந்தாலும் அல்லாஹ் எம்முடன் இருக்கின்றான் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இதனாலேயே நபியவர்களும் தக்வா சார்ந்த வாழ்வை அடிக்கடி அல்லாஹ்விடம் கேட்பவர்களாக இருந்தார்கள்.

*''யா அல்லாஹ்! உன்னிடம் நேர்வழியை, இறையச்சத்தை, பத்தினித்தனத்தை மற்றும் செல்வத்தை கேட்கிறேன்.'' (முஸ்லிம்)*

நாம் தொடர்ந்தும் எம் வாழ்வில் தக்வாவுடன் பாவங்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதன் அவசியம் இந்த நபிமொழி மூலம் புரிகின்றது.

இவ்வுணர்வை நாம் எப்போதும் கொண்டிருப்பதற்கான இலகுவான வழிகளே வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வை நினைவுபடுத்திக் கொள்வதும், நாம் செய்கின்ற சிறு சிறு தவறுகளுக்காக அல்லாஹ்விடத்தில் அதிகம் இஸ்திஃபார் செய்வதும், அல்குர்ஆனுடன் தொடர்பை பேணுவதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 05

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# ஸாலிஹ் நபியின் ஒட்டகம்

நான் நன்மை மாத்திரம் கொண்ட ஒரு ஜீவன் ஆவேன். தீமை என்றால் என்னதென்றே எனக்குத் தெரியாது. எந்தவித களங்கமும் இல்லாத பூரண நன்மை.

பிறப்பதற்கு முன்பும் நான் யாரையும் நோவிக்கவில்லை. பிறந்த பின்பும் நான் யாரையும் நோவிக்கவில்லை. ஆயினும், ஒரு குற்றமும் செய்யாத என்னை அவர்கள் கொலை செய்தார்கள்! அவ்வாறு என்னை யாரும் கொன்று விடக் கூடாது என்று இறைவன் அவர்களுக்கு கட்டளை பிறப்பித்திருந்தான். இருந்தும் அவர்கள் என்னைக் கொலை செய்தார்கள்!

என்னை கொலை செய்ததன் மூலம் பூமியில் அவர்கள் நன்மையை கொலை செய்து விட்டார்கள். வாழ்க்கையின் பலிபீடத்தில் இரத்தம் அப்பிப்பதற்கும் நன்மையை நிர்ப்பந்திக்கும் ஆரம்பமே என்னுடைய கொலையாக இருந்தது. அதேவேளை, என்னுடைய பிறப்பே ஓர் அற்புதமாக இருந்தது!




இறைவனின் ஒரு சொல்லால் உன்னதமான ஒரு கற்பாறையில் நின்று நான் பிறந்தேன். கற்பாறையின் ஒரு பகுதியாகத்தான் நான் இருந்தேன். உயிரற்ற ஒரு கற்பாறையாக இருந்ததை நான் அறிந்திருந்தேன். கரடு முரடான இந்தப் பாறை மென்மையான மாமிசமாக மாறியது. நரம்புகள் தோன்றி அதில் இரத்தம் ஓட ஆரம்பித்தது. இரத்தம் பாலாகவும் மாறியது. எனது முலைக்காம்புகளில் பால் சுரக்க ஆரம்பித்தது! அது மட்டுமல்ல எனது வயிற்றில் ஒரு கன்றும் உண்டாகி இருந்தது! ஆம் நான் ஒரு சினை ஒட்டகமாக இருந்தேன். நான் குட்டியை ஈன்றெடுத்தேன். எனது முலைகளில் பால் நிறைந்தது. பசித்துத் தாகித்திருந்த ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு நான் பால் நல்கக்கூடியவளாக இருந்தேன். ஒரு நாள் முழுதும் நான் அவர்களுக்கு பால் வழங்குவேன். அடுத்த நாள் எனது குட்டிக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வாறு ஒரு பிரதிபலனும் பாராது நான் அவர்களுக்குப் பால் வழங்கிக் கொண்டிருந்தேன். ஆயினும் இறைவன் வழங்கிய இந்த அற்புதமான அருட்கொடைக்கு அவர்கள் ஒரு சிறிதும் இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருக்கவில்லை!

இவ்வாறான நிலையில்தான் நான் கொலை செய்யப்பட்டேன். ஒரு நாள் எனது கழுத்தை நோக்கி கத்தி நீண்டு வந்தது. எந்த நிமிடமும் நான் இறந்து வீழலாம். இறக்கப் போகின்றேன் என்பதை அறிந்தபோது எனது வாழ்க்கைக் கதையை எழுதுவதற்கு நான் வழிதேடினேன். எனது இரத்தத்தில் தோய்ந்து வந்த ஒரு நூல் துண்டுதான் எனக்குக் கிட்டியது! எனது கதையை பூரணமாக்க சிலவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னால் முடியாது போய்விடலாம். அவ்வாறு பூர்த்தியாக்காது விட நான் எண்ணியிருக்கவில்லை. எனது இறப்பின்போது எனது வதனத்தில் ஒரு மந்தகாசப் புன்னகை விரிந்திருந்தது. ஒட்டகமும் புன்னகைக்குமோ என்று நீங்கள் ஆச்சரியப்படுவது எனக்குத் தெரிகின்றது. அது சாத்தியமாவது என்னைப்போல ஒட்டகம் அல்லாத ஒட்டகம் ஆகும்போது அது ஓர் உயிரினத்தின் வடிவமும் ஓர் அத்தாட்சியினது வெளிப்பாடாகவும் ஆகும் போது நீங்கள் ஒரு பொருளாகவும் அதே சமயம், மற்றொன்றினது வெளிப்பாடாகவும் ஆகும்போது நீங்கள் மரிப்பதில்லை! அல்லது மரணித்தால் கூட மீண்டும் நித்திரையிலிருந்து விழித்தெழும் ஒருவன் அது நித்திரை என்பதை அறிந்து கொள்ளும்போது முகத்தில் தோன்றும் மந்தகாசப் புன்னகையே அது. இறந்த பின்பு மீண்டும் உயிர்த்தெழ மாட்டோம் என்று நம்புவது எவ்வளவு பயங்கரமானது! என்னைக் கொலை செய்தவன் இவ்வாறு மறுமையில் உயிர்த்தெழுவதை நம்பாமல் இருந்தான்.


மனித சரித்திரத்தில் நான் ஸாலிஹின் ஒட்டகம் என்றே அழைக்கப்படுகின்றேன்.

அல்லாஹ்வின் ஒட்டகம் என்ற பெயர் இறை மறையான அல்குர்ஆன் எனக்குத் தந்தது.

''இது அல்லாஹ்வின் ஒட்டகமாகும். அது உங்களுக்கு ஓர் அத்தாட்சியாகத் தரப்பட்டுள்ளது.''

என்னை கண்ணியப்படுத்தி அல்லாஹ்வின் பெயருடன் இணைத்துக் குறிப்பிடுகின்றான்; எனது நிலையை உயர்த்தியிருக்கின்றான். நான் வெறுமனே ஓர் ஒட்டகமாக இருக்கவில்லை. எனது ரூபம் ஒட்டகமாக இருந்தது. ஆயினும் யதார்த்தத்தில் நான் அல்லாஹ்வின் ஓர் அற்புதமாக இருந்தேன். பிரபஞ்சத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் வடிவம் உண்டு. அதேவேளை அவை ஒவ்வொன்றும் அத்தாட்சியுமாகும்

எங்கிருந்து நான் ஆரம்பிப்பது? ஸாலிஹ் நபியின் சனங்களுக்கு ஓர் அற்புதமாவதற்கு முன்பு எனக்கே என் பிறப்பு அற்புதமாக இருந்தது. எனது பிறப்பு சட்டென நடந்தது. இல்லாமையில் நின்று புதிய ஓர் உணர்வுடன் நான் உலகில் திடீரெனத் தோன்றினேன். ஒரு வகையான வேற்றுணர்வும் எனக்கு ஏற்பட்டது.



நான் ஒட்டகம் இல்லாவிட்டாலும் ஒட்டகத்தின் தோலினால் மூடப்பட்டுள்ளேன் என்பதை நான் அறிந்திருந்தேன். சத்தியத்தை வெறுக்கின்ற உலகத்தில் சத்தியத்தின் வெளிப்பாடாக நான் இருந்தேன் என்பதும் எனக்குத் தெரியும்.

கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி வந்த மாசில்லா நேசம் பூண்ட ஒரு ஜீவனாக நான் இருந்தேன்.

இனி இல்லாத சிக்கல் நிறைந்ததாக இருந்தது எனது நிலைமை. ஒட்டகத்தின் உடலும் ஒட்டகத்தின் இயல்புகளும் ஒட்டகத்தின் இயக்கங்களும் எனக்குத் தரப்பட்டன. அதேவேளை, இந்த புறத்தோற்றத்துக்கு அப்பால் அந்தரங்கத்தில் மிருகங்களுடன் எந்த சம்பந்தமுமில்லாத உயிரற்ற ஒரு பாறைத் துண்டாகவும் நான் இருந்தேன். அழகானதும் விசாலமானதுமான ஓர் உலகம் என்னுள்ளே உண்டாகியிருந்தது! அல்லாஹ்வின் அத்தாட்சிகள் நிறைந்த உலகம்!

பிறந்த பின்புதான் எனது பிறப்பின் அற்புதக் கதையை நான் அறிந்து கொண்டேன்.


ஸமூது கோத்திரத்தில் நான் பிறந்தேன். வலிமையான உடற்பலமும் பலவீனமான புத்தியும் உள்ள ஒரு கூட்டத்தினர் செல்வம் அவர்களது அழிவுக்கு வழிகோலிவிட்டது. அபரிதமான ஆசைகள் பன்மடங்கு அதிகரித்தன. சிலைகளை வணங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். சமூகம் முழுதும் இக்கொடிய பாவத்தில் மூழ்கிப் போயிருந்தது என்று சொல்ல முடியாது. ஏனெனில், வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சிலர் நம்பிக்கையாளர்களுடன் கொண்ட தொடர்பு காரணமாக முஸ்லிம்களாக மாறினர். பெரும்பான்மையினர் தனது நலத்தை மட்டும் தேடுகின்ற பொன்னையும் பொருளையும் பெருக்குகின்ற முடிவில்லாத உடலிச்சை எனும் சிலைகளையும் பூசிக்கின்றவர்களாக இருந்தனர். இந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த ஸமூது கூட்டத்தினர்களுக்கு ஒரு நபியை அனுப்ப அல்லாஹ் தீர்மானித்தான் அவர்களிடையே வாழ்ந்த மிக சிரேஷ்ட மனிதரும் ஒரே இறைவனை வணங்கி வந்தவருமான ஸாலிஹ் அவர்களை நபியாக அனுப்பி வைத்தான்.

ஸாலிஹ் என்றாலே நல்லவன் என்று அர்த்தம். அந்தப் பெயர் அவருக்கு மிகப் பொருத்தமாகவே இருந்தது.

**29 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அல்லாஹ்வின் அற்புதப்படைப்பு | தொடர் - 105

*அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)*

BA.(cey), Dip. in psychological Counseling.

www.aliaalif.tk / aalifali@gmail.com


# புழுத்து அழுகும் மனித உடல்

அழகு, கண்ணியம், பட்டம், பதவி எல்லாம் உயிர் உள்ளவரைதான். உயிர் பிரிந்ததும் அவை அனைத்தும் செல்லாக் காசாகின்றன. உயிர் பிரிந்ததும் யாரும் பெயர், பட்டம், பதவிகளைக் கூறி அழைப்பதில்லை. 'ஜனாஸா' அல்லது 'மையித்' தான். ஒரு நாளைக்கு மேல் வீட்டில் வைத்திருப்பது மில்லை. வைத்துக்கொள்ள விரும்புவதுமில்லை. வைத்திருந்தாலும் நேரம் செல்லச் செல்ல உடற் பாகங்கள் அழுகி, பழுதடைந்து துர்நாற்றம் வீச ஆரம்பிக்கின்றது.

எதுவும் உடலினுள் இருக்கும் வரைதான் சுத்தம். வெளியேறினால் அசுத்தம்தான். எச்சில் வாயினுள் இருக்கும் வரை சுத்தம்; வெளியே துப்பிவிட்டால் அசுத்தம். உணவு இரைப்பையில் இருக்கும் வரை சுத்தம்; வாந்தியாகவோ, மலமாகவோ வெளியேறி னால் அசிங்கம். நீர் உள்ளிருக்கும் வரை சுத்தம்; சிறு நீராகவோ, வியர்வையாகவோ, இரத்தமாகவோ வெளியேறினால் அசுத்தம்தான். அதேபோன்று, உடலினுள் ரூஹும், உயிரும் இருக்கும் வரை உடல் சுத்தம்தான். ஆனால் அவை பிரிந்துவிட்டால் அந்த உடல் அசுத்தமாகி அழுக்குற்று பழுதடைய ஆரம்பிக்கின்றது. ரூஹ் உடலை விட்டுப் பிரிந்ததும் உடலின் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு அவை உருக்குலைய ஆரம் பிக்கின்றன.

**அறிவியலில் மரணம்**


இதயம் துடிப்பது நின்றுவிட்டால் அதைத்தான் மரணம் என்று பொதுவாக நாம் நம்புகின்றோம். ஆனால், மருத்துவ அறிவியலின்படி மரணம் என்பது உடலிலுள்ள உயிர்க் கலங்களின் இயக்கமின்மை என்று வரையறுக்கப்படுகின்றது. மருத்துவ அறிவியல் மரணத்தை இரு வகையாகப் பிரித்து நோக்குகின்றது. அவை 'மூளைச் சாவு' **(Cerebral death)** மற்றும் 'மருத்துவச் சாவு' **(Clinical death)** என்பனவாகும்.

மருத்துவச் சாவு என்பது பல்வேறு காரணங் களினால் இதயம் இயங்காது நின்று விடுவதாகும். அப்பொழுது சுவாசித்தலும் இரத்த ஓட்டமும் நின்று விடுகின்றன. இதயம் நின்று போய் விட்டா லும், ஒரு சில நிமிடங்கள் வரை எமது மூளை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும். அந்த சில நிமிடங்களுக்குப் பின்பு இருந்த ஒட்சிசன் வாயுவும் தீர்ந்துபோவதால் மூளைக் கலங்களும் இறந்து மூளை இயக்கமற்று செயலிழந்து விடுகிறது. இதுவே மூளைச் சாவு எனப்படுகின்றது.

மூளைச் சாவே ஒரு மனிதனின் முடிவான இறப் பாகும். இதயம் நின்றாலும் அழுத்தங்கள் கொடுத்து அல்லது வேறு செயற்கை இயந்திர இதயங்களின் துணையோடு இயங்க வைக்கலாம். ஆனால், மூளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இறந்துவிட்டால் அதன் பிறகு உயிரை மீட்டுப் பெறவே முடியாது. அப்போதுதான் ஒருவர் உண்மையிலேயே மரணம் அடைந்ததாக கருதப்படுகிறார். எனவே, அறிவியலின்படி மூளையும் இதயமும் தங்களது இயக்கத்தை நிறுத்துவதே மரணமாகும்.

**மரணித்த அடுத்த வினாடி**

இதயத்தின் துடிப்பு நின்று அதன் காரணமாக மூளையும் இறந்துவிட்டால் உடலின் எப்பகுதியாலும் இரத்தத்தையோ, சுவாசிப்பதற்கு ஒட்சிசன் வாயுவையோ பெற்றுக் கொள்ள முடியாது போகின்றது. எனவே, உடலிலுள்ள இலட்சக்கணக்கான கலங்களும் மூச்சுத் திணறி இறக்க ஆரம்பிக்கின்றன. சிலருக்கு உடலிலிருந்து மலமும் சிறுநீரும் கூட வெளியேறுகின்றன. இது ரூஹ் கைப்பற்றப்படும் ஸகராத்துடைய வேதனையினால் இருக்கலாம். முகத்தின் தோல்கள் இறுக்கமடைந்து முக சுருக்கங்கள் மறைந்துவிடும். அவர் கடைசியாக சுவாசித்த மூச்சும் நுரையீரலில் ஏலவே இருந்த காற்றும் அப்படியே அவரது உடலில் தங்கியிருப்பதால் இறந்தவரின் உடலை வேகமாக அழுத்தினாலோ அல்லது புரட்டினாலோ அவர்களிடம் இருந்து முனங்கள் சப்தம் கேட்கும். மூச்சு விடுவது போன்று நெஞ்சு ஏறி இறங்கும். சிலர் இதைதான் அவர்கள் இறந்த பிறகும் பேசினார்கள், மூச்சு விட்டார்கள் என்று கூறுவார்கள். நாம் இறந்த உடனே நமது உடல் உறுப்புகளும் இறந்து விடுவதில்லை. நமது இதயம், கண்கள், சிறுநீரகம் போன்ற சில உடல் உறுப்புகள் செயல்படும் திறனோடுதான் இருக்கும். எனவே, இறந்த அடுத்த சில வினாடிகளிலேயே உறுப்பு மாற்றுச் சிகிச்சையின் மூலம் அதை வேறு ஒருவருக்கு பொருத்த முடியும் என்கிறது மருத்துவம்.

**உடல் குளிர்ச்சியடைகின்றது**

ஒட்சிசன் இன்றி கலங்கள் மூச்சுரைத்து மூர்ச்சையாவதால் படிப்படியாக உடலின் வெப்ப நிலை குறைய ஆரம்பிக்கின்றது. இதனை அல்கோர் மோர்டிஸ் (Algor mortis)என்பர். மணித்தியாலத்திற்கு 1.5 டிகிரி பாரன்ஹீட் என்ற அளவில் வெப்பம் வெளியேறி உடல் குளிர்ச்சியடையும். இந்நேரம் இறந்த ஒருவரின் உடலைத் தொட்டுப் பார்த்தால் அவ்வுடல் குளிர்ச்சியடைந்திருக்கும்.

**உடலின் நிறம் மாறுகின்றது**

இரத்த ஓட்டம் நின்றிருப்பதாலும் புவியின் ஈர்ப்பு விசையாலும் உடலில் இருக்கும் மொத்த இரத்தமும் இரத்தக் குழாய்களிலிருந்து வடிந்து உடலின் கீழ்ப் பகுதியில் வந்து சேரும். இதனால் உடலின் மேல் பகுதி மங்கலான வெளிர் நிறத்திலும் இரத்தம் திரட்சியடைந்திருக்கும் அடிப்பகுதி ஊதா நிறத்திற்கும் மாறும். ஊதா நிறத்தில் புள்ளிகளும் தோன்றியிருக்கும். இது லிவர் மார்டிஸ் (livor mortis) என்று கூறப்படுகின்றது. இதனை வைத்துத்தான் உடலிலிருந்து எப்போது உயிர் பிரிந்துள்ளது என்பதை மருத்துவர்கள் கண்டுபிடிக்கின்றனர்.

**உடல் கனக்கின்றது**

சிலபோது பாரமான பொருட்களைத் தூக்கும் போது நாம் விளையாட்டுக்காக பொனப் பாரம்-பிணப் பாரம் என்று கூறுவோம். இதில் உண்மை இருக்கின்றது. இறந்ததன் பின்னர் நமது உடலின் பாரம் கூடுகின்றது அல்லது உடல் கனக்கின்றது. இது எப்படி நடக்கின்றதென்றால் நுரையீரல் சுவாசத்தை நிறுத்தியதும் ஒட்சிசன் நிறுத்தப்படுகின்றது. என்றாலும் உடனடியாக கலங்கள் தமது பணிகளை நிறுத்தாமல் வெறுமையாக சுவாசிக்கின்றன. இதற்கு காற்றில்லா சுவாசம் என்பர்.

ஒட்சிசனைச் சுவாசித்தால் உடலுக்கு சக்தி கிடைக்கும். காற்றின்றி வெறுமையாகச் சுவாசித்தால் உடற் பாகங்களில் இலக்ட்ரிக் அசிட் என்ற ஒரு வகை அமிலம்தான் உருவாகும். இந்த அமிலத்தால் உடலின் உறுப்புகளின் மென்மைத் தன்மை நீங்கி உடல் உறுப்புகள் கடினத்தன்மை பெறும்; இறுகி கெட்டியாகி விடும். இதனை ரீகர் மார்டிஸ் (Rigor Mortis)என்பர். ஒருவர் மரணித்து ஆறு மணி நேரங்களில் இச்செயற்பாடுகள் ஆரம்பமாகி 48 மணி நேரம் வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். நாம் உயிருடன் இருக்கையில் வேகமாக நீண்ட தூரம் ஓடினாலும் இந்த அமிலம் சுரக்கின்றது. ஆனால், அப்போது வேக வேகமாக மூச்சிரைப்பதால் இரத்த ஓட்டத்துடன் இந்த அமிலம் கலந்து வீரியம் குறைந்து பாதிப்பிலாமல் செல்கின்றது. சிலவேளை தசைப்பிடிப்பு ஏற்பட வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பக்டீரியாக்களின் பணி ஆரம்பம்

இரண்டு நாட்களோடு இந்த அமிலம் உடல் முழுக்கப் பரவி உடல் கெட்டியாகி இருப்பதனால் இனியும் பக்டீரியா மற்றும் ஏனைய கிருமிகளை எதிர்த்துப் போராடத் திராணியற்ற நிலைக்கு உடல் மாறியிருக்கும். தற்போது இரத்தத்தில் உள்ள கார்பன் அணுக்கள் விரிவடைய ஆரம்பிக்கின்றன. இதனால் கலங்களும் திசுக்களும் பருத்து ஊதி வெடித்து, அதன் என்சைம்ஸ்களை வெளியேற்றும். கணையமும் தனக்குள் உள்ள என்சைம்ஸ்களை வெளியேற்றி விடும். எனவே, மீண்டும் உடல் கடினத்தன்மை இழந்து, மென்மையாகி விடும்.

இனி குடல், மலப் பை போன்ற இடங்களிலில் வாழும் பக்டீரியாக்களும் இதர கிருமிகளும் குடல்களை கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட ஆரம்பிக்கும். குறுகிய நேரத்தில் அவை இன்னும் இனத்தைப் பெருக்கிக் கொண்டு உடலின் ஏனைய அங்கங்களுக்குள்ளும் நுழைந்து பெரும் பகுதியைத் தின்று தீர்த்துவிடும்.


### துர்நாற்றம் வீசத் தொடங்கும்


உடலில் சேர்ந்திருந்த திரவங்கள் இரத்தம், சிறுநீர், அமிலங்கள், நொதியங்கள் இன்னும் இது போன்ற திரவங்கள் எல்லாம் அதனதன் பகுதிகளி லிருந்து கசிந்து உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் வழிந்தோட ஆரம்பிக்கும். இது கிருமிகளுக்கு இன்னும் இலகுவாக உடலைத் தின்பதற்கு உதவி புரியும். இத்திரவங்கள் புழுத்து வடிந்து கொண்டிருக்கும் தசைப் பகுதிகளில் பட்டு, ஊறி காற்றுடன் கலந்து குறிப்பிட்ட தூரத்திற்கு சகிக்க முடியாத துர்நாற்றத்தைக் கிளப்பிவிடும். உடல் அழுகும்போது பியுட்ரஸைன் **(putrescine)**, கெடா வரைன் **(cadaverine)** காலரா நுண்ணுயிர் நச்சு போன்ற இரசாயனங்கள் வெளியேறும். இதன் காரணத்தால்தான் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுகிறது.

### மோப்பம் பிடிக்கும் ஈக்கள்

இறந்த பிணங்களில் ஈக்கள் வந்து மூடுவதை நாம் கண்டிருப்போம். உடலிலிருந்து ஆன்மா பிரிந்தால் அது ஈக்களுக்குத் தெரிந்துவிடும். எனவே, ஒருவர் மரணித்து ஒரு மணிநேரம் கழிந்ததிலிருந்து அச்சடலத்தின் மேல் ஈக்கள் வந்து மொய்த்து முட்டையிட ஆரம்பிக்கின்றன. அநேகமாக அவை வாய், மூக்குத் துவாரம், கண்கள் திறந்திருப்பின் அதில், அக்குள் போன்ற

# CADAVERINE





இடங்களில் முட்டைகளை இடுகின்றன. 24 மணிநேரங்களில் முட்டைகள் பொரிக்கப்படும். முட்டையிலிருந்து குடம்பிப் புழுக்கள் (லாவாக்கள்) வெளிவருகின்றன. பின்னர் அவை உடற் தசை களைத் தின்று தின்று அரை அங்குல நீளப் புழுக் களாக வளர்கின்றன. அதே நிலையில் இருந்து கொண்டு தொடர்ந்து 12 நாட்களுக்கு அவை சடலத்தை உண்ணுகின்றன. புழுக்கள் இறந்தவரின் 60 உடலை ஒரே வாரத்தில் தின்று செரித்துவிடும். அதன் பின் அப்புழுக்கள் ஈக்களாக வளர்கின்றன. குறித்த சடலம் புதைக்கப்படாமல் வெளியிலேயே வைக்கப்பட்டிருந்தால் வளர்ச்சியடைந்த அதே ஈக்கள் இனப்பெருக்கம் செய்து மீண்டும் அச்சட லத்தின் மீதே முட்டையிடுகின்றன. இவ்வாறு ஒரு சடலத்தைச் சுற்றியே அது மனிதனாகவோ, விலங்கினங்களாகவோ இருக்கலாம் ஆயிரக்க ணக்கான ஈக்களின் வாழ்க்கை வட்டம் ஆரம்பிக் கின்றது.

**29 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் சிங்கத்தின் சாதனை

லாகூரிலே ஓர் இலக்கியச் சங்கம் இயங்கி வந்தது. அதன் அங்கத்தவர்கள் 'சத்தியத்தின் குரல்' என்ற பத்திரிகையை விரும்பிப் படிக்கும் இயல்பினர். அவர்கள் அவ்வளவு தூரத்திற்கு அப்பத்திரிகை ஆசிரியருடைய எழுத்து வன்மையிலே மனதை பறி கொடுத்திருந்தார்கள். மேற்படி ஆசிரியரை நேரிலே பார்த்து அளவளாவும் ஆசை அவர்கள் மனத்திலே திரண்டது. எனவே, தமது சங்கத்தின் ஆண்டு விழாவிற்கு அந்த ஆசிரியரையே சிறப்புச் சொற்பொழிவாளராக அழைப்பது என்று முடிவு செய்தார்கள்.

**எம்.ஏ. ரஹ்மான்**

லாகூர் இலக்கியச் சங்கத்தின் அழைப்பினை 'சத்தியத்தின் குரல்' ஆசிரியர் மன உவப்புடன் ஏற்றுக் கொண்டார்.

கூட்டம் பிரமாண்டமானதாக இருந்தது. அக் கூட்டத்திற்கு இஸ்லாமிய மார்க்க ஞானிகளும் இலக்கிய அறிஞர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். கவிஞர் ஹாலி, கவிஞர் இக்பால், உருது எழுத்தாளர் நஜீர் அஹ்மத் போன்றோர் முன்வரிசையில் இருந்தனர்.

பதினாறு வயது கூட ஆகாத பையன் 'சத்தியத்தின் குரல்' ஆசிரியன் என்ற முறையிலே பேச எழுந்ததும் கூட்டத்தினர் திகைத்தனர். பண்டிதர்களும் அறிஞர்களும் அலட்சியமாக முறுவலித்தார்கள். இவற்றைச் சட்டை செய்யாது, அந்த இளைஞர், 'மதத்தின் அடிப்படையான பகுத்தறிவு' என்ற பொருள் பற்றி ஆழமான சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தினான். அந்தப் பேச்சினைக் கேட்ட அனைவரும் வியந்து, அவனைப் பாராட்டினார்கள். ''இளந் தோள்களிலே முதிர்ந்தலே'' என்று கவிஞர் அல்தாப் ஹுசேன் ஹாலி அவர்களே புகழ்ந்து கூறினார்கள்.

இந்த இளைஞனே இந்திய முஸ்லிம் தேசிய எழுச்சியின் விடுதலை வீரராகத் திகழ்ந்த மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஆவர். இளமைப் பருவத்திலேயே மார்க்க ஞானத்தின் புலமை மிக்க மௌலானா ஆஸாத், பிற்காலத்தில் 'இளம்பிறை' எனும் இதழ் நடத்தி, இந்திய முஸ்லிம்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டினார். தர்ஜுமா அல்குர்ஆன் என்னும் அற்புதமான குர்ஆன் விளக்கவுரை ஒன்றினை இயற்றியுள்ளார். குர்ஆனின் தோற்றுவாய் அத்தியாயமான சூரத்துல் பாத்திஹா பற்றிய தமது வியாக்கியானத்தில் மிகக் கூடுதலான் முக்கியத்துவத்தை ஆஸாத் அளித்தார். அதிலே இடம்பெறும் சுருக்கமான ஏழு வாக்கியங்களின் வியாக்கியானங்கள் குர்ஆன் முழுவதிலுமுள்ள மன உருவங்களை விரிவாகக் கொண்டுள்ளன. திருக்குர்ஆனின் கீர்த்திக்கு மௌலானவின் தர்ஜுமா அல்குர்ஆன் கணிசமான பங்களிப்பாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## எத்தனை என்பதைக் கூற முடியுமா?

1. 'அல்பாத்திஹா' எனும் அத்தியாயத்தில் மொத்தம் எத்தனை வசனங்கள் உள்ளன? எத்தனை சொற்கள் இடம்பெற்றுள்ளன? எத்தனை எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன?

   7 வசனங்கள், 25 சொற்கள், 126 எழுத்துக்கள்

2. அல்குர்ஆனில் மிக நீளமான 'அல் பகரா' அத்தியாயத்தில் இடம்பெறும் மொத்த வசனங்களின் எண்ணிக்கை எத்தனை? எத்தனை சொற்கள், எத்தனை எழுத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன?

   286 வசனங்கள், 6021 சொற்கள்,
   25500 எழுத்துக்கள்

3. குர்ஆனில் மிகச் சிறிய அத்தியாயமான 'அல் கவ்ஸர்' அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள மொத்த வசனங்கள் எத்தனை? எத்தனை சொற்கள், எத்தனை எழுத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன?

   3 வசனங்கள், 10 சொற்கள், 42 எழுத்துக்கள்

**ஜுனைட் பாத்திமா ஸீமா**
**பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.**
**ஓட்டமாவடி**

## வாழ்வில் வெற்றி பெற...

- நல்லதே நடக்கும் என்ற மனோபாவத்தை வளருங்கள்.
- தீர்மானிக்கப்பட்ட இலட்சியம் வேண்டும்.
- மிகச் சரியாக சிந்திக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.
- சுய ஒழுக்கம் வேண்டும்.
- எல்லாவற்றிலும் நேர்மையான வழியில் செல்லுங்கள்.
- தோல்வி மூலம் கிடைத்த பாடத்தை நினைவில் கொண்டு முன்னேறுங்கள்.
- அளவற்ற ஊக்கம் வேண்டும்.
- உடலையும் மனதையும் ஆரோக்கியமாக பராமரியுங்கள்.
- நேரத்தையும் பணத்தையும் திட்டமிட்டபடியே தவறாமல் பயன்படுத்துங்கள்.
- ஒரே முனைப்புடன் வேலை செய்யுங்கள்.

**எம்.எச். அப்ஸா**
**கிரி/கெகுணகொல்ல தே.பா.**

## உலகில் விசேட பெயர்களால் அழைக்கப்படுபவை

- நைல் நதியின் கொடை - எகிப்து
- சீனாவின் துயரம் - குவாங்கோ நதி
- உலகின் கூரை - திபெத்
- ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து
- ஆறுகள் இல்லாத நாடு - சவூதி அரேபியா
- யுத்தம் இல்லாத நாடு - சுவிட்லாந்து
- புனித பூமி - ஜெரூசலம்
- புகையிரதப் பாதை இல்லாத நாடு - ஆப்கானிஸ்தான்
- மரகதத்தீவு - அயர்லாந்து
- அதிகாலை அமைதியான நாடு - கொரியா
- ஏழு குன்றுகளின் நகரம் - ரோம்
- ஆசியாவின் வைரம் - இலங்கை
- ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் - ஹங்கேரி
- சினிமா தியேட்டர் இல்லாத நாடு - சவூதி அரேபியா
- சூரியன் உதிக்கும் நாடு - ஜப்பான்
- சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து



**எம்.ஆர்.எம். அர்பீத்**
**நிக/அல் இல்மியா மு.ம.வி.**
**வெல்பொதுவெவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆசானே!

எங்களுக்கு கல்வியை
போதிக்க ஆசான் என்ற பெயரில்
உருவானவரே!

எங்களுக்கு கல்வியை
மட்டுமின்றி பற்பல
புதுமைகளையும் காட்டித் தந்தவரே!

ஆசிரியர் என்ற அந்தஸ்தின் மூலம்
பல சாதனைகள் புரிந்தவரே!

கல்வி என்ற பெயரில் உலகை
காட்டித் தந்தவரே!

எங்கள் கல்விக்கு தூணாய் ஓங்கி நிற்பவரே!

எங்கள் அறிவிற்கு சிறந்த அடித்தளமாய்
இருந்தவரே!

எங்கள் மனதிலும் ஆசான் என்ற பெயரில்
இடம்பிடித்து விட்டாய்!

ஆசான் என்ற பெயரில் 'அ' எழுத்து முதல்
அம்மா வரை கற்றுத் தந்தவரே!

ஆசான் என்னும் பெயர் பெற்று கல்விக்கு
ஒளி விளக்கேற்றினீர்

✍ **எம்.எப். மர்ஸீனா**
**ஜி/முஸ்லிம் பெ.க.**
**காலி**

# பெற்றுக் கொள்ளாததை எல்லாம் பெற்றிடு...!

1. வீட்டில் சுவனத்தைப் பார்க்க வேண்டுமா?
தாய்மடியில் சாய்ந்திடு, தந்தையை அணைத்திடு
2. உண்மையான சந்தோஷத்தை உணர வேண்டுமா?
பிறருக்கு உதவிடு
3. எல்லோரின் அன்பையும் பெற வேண்டுமா?
இன்முகத்துடன் செவிசாய்த்திடு
4. இம்மையிலும் மறுமையிலும் வெற்றி வேண்டுமா?
தொழுகையை நிலைநிறுத்திடு

✍ **சாகிரா மொஹிடீன்**
**இஸ்லாஹிய்யா பெ.அ.க.**
**புத்தளம்**

# நாடுகள் கூறும் பழமொழிகள்

⇨ மூன்று காரியங்கள் சந்தோஷ வாழ்க்கைக் குரியவை:
1. சென்றதை மறப்பது
2. நிகழ்காலத்தை நேர்வழியில் செலுத்துவது
3. வருங்காலத்தைப் பற்றி சிந்திப்பது (ஜேர்மனி)

⇨ மற்றவர்களை குறைகூறுவது போல் நீ உன்னைக் குறைக் கூறிக் கொள்; உன்னை மன்னிப்பது போல் மற்றவர்களை மன்னித்துக் கொள். (சீனா)

⇨ அறிவு தலைக்கு கிரீடம்; அடக்கம் காலுக்கு செருப்பு (ஹிப்ரு)

⇨ நோயாளிகளைப் பார்க்க ஒரு மைல் செல், இரண்டு பேர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த இரண்டு மை செல், ஒரு நண்பனைக் காண மூன்று மைல் தூரம் செல். (அரேபியா)

⇨ உயர்ந்தவர்கள் உன்னை எப்படி நடத்த வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயோ அப்படியே நீ தாழ்ந்தவர்களை நடத்து. (ஸ்பெய்ன்)

⇨ அறிஞர்கள் எல்லோரும் ஒரே மாதிரியே சிந்திக்கிறார்கள். ஒவ்வொரு முட்டாள்களுக்கும் ஒவ்வோர் அபிப்பிராயம். (இந்தியா)

✍ **ரஹீமா ராஸிக்**
**அல்முஃமினாத் பெ.அ.க.**
**அக்குரணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிந்திக்க சில...

- ஒவ்வொரு மனிதனும் அவனைப் பார்த்து பிறர் பொறாமைப்பட, அவன் பிறரைப் பார்த்து பொறாமைப் படுகிறான்.
- பிறரைத் திருத்த உன்னால் முடியாது. ஆனால், உன்னால் திருத்த முடியுமான ஒருவன் இந்த உலகில் நீ மட்டும்தான்.
- நாம் எம்முடனே சில வேளை கருத்தில் முரண்படும்போது எப்படி அடுத்தவன் எமது கருத்தில் உடன்படுவதை எதிர்பார்க்க முடியும்
- பொய்யனுக்கு கிடைக்கும் மிகப் பெரிய தண்டனை அவன் உண்மை சொல்லும்போது யாரும் நம்பாதிருப்பதே!
- பிறரின் குறையை அம்பலப்படுத்தினால் கேவலமான மரணம் சம்பவிக்கும்.

✍ **ஏ.ஏ.எம். முபீஸ்**
**சிறாஜிய்யா வளாகம்**

# விஞ்ஞான கண்டுபிடிப்புகள்

1. இரத்த அமுத்தத்தைக் கணிப்பதற்கு பயன்படும் கருவி எது? ஸ்பிக்னோமானோ மீற்றர்
2. மின்சக்தியை அளக்கப் பயன்படும் கருவி யாது? கல்வனோமானி
3. மிகச் சிறிய பொருளை பன்மடங்கு பெரிதாகக் காட்டும் கருவி எது? நுணுக்குக்காட்டி
4. மார்பினதும் நுரையீரலினதும் ஒலியை அளவிட மருத்துவர்கள் பயன்படுத்தும் கருவி யாது? ஸ்தடஸ்கோப்
5. பாலின் அடர்த்தியை அளவிடும் கருவி யாது? லக்டோ மீற்றர்
7. நீருக்கடியில் உள்ள சத்தத்தை அளவிட உதவும் கருவி எது? நீர்ப்பன்னி
8. வளிமண்டல அமுக்கத்தை அளவிடும் கருவி எது? பாரமானி
9. காற்றிலுள்ள ஈரத் தன்மையை அளக்கும் கருவி எது? ஈரமானி
10. காரின் வேகத்தை அளக்கும் கருவி எது? அனிமோ மீற்றர்
11. ஒலியை அளக்கும் கருவி எது? ஓடியோ மீற்றர்
12. மலையின் உயரத்தை அளக்கும் கருவி எது? குத்துயரமானி
13. மனிதனின் இதயத் துடிப்பை அளக்கப் பயன்படும் கருவி எது? கார்டியோ கிராப்

✍ **எம்.எப்.எம் மின்ஸா**
**கெக்குணகொல்ல தே.பா.**

# சிந்தனைத் துளிகள்...

⇨ எது தேவையோ, அது கிடைக்கவில்லை என்றால் கிடைப்பதை வைத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

⇨ வார்த்தைகள்தான் மனித இனம் பயன் படுத்தும் சக்தி நிறைந்த மருந்தாகும்.

⇨ நீ வெற்றிக்காகப் போராடும்போது வீண் முயற்சி என்று சொல்பவர்கள் நீ வெற்றி பெற்ற பின் விடாமுயற்சி என்று சொல் வார்கள்.

⇨ செல்வம் உப்புத் தண்ணீர் போலத்தான். அதிகமாகக் குடிக்கும்போது மேலும் அதிகமாகத் தாகம் எடுக்கிறது.

⇨ மற்றவர்களிடம் குறைந்த பட்சம் நாம் ஏழு தவறுகளையாவது கண்டுபிடித்து விடலாம். ஆனால், நம் பத்து தவறுகளில் ஒன்றைக் கூட கண்டுபிடிக்க நம்மால் முடிவதில்லை.

⇨ அறிவுள்ள குழந்தை, மகிழ்ச்சியுள்ள தந் தையை உருவாக்குகிறது.

✍ **ஆர். லிகா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு நபிப் பட்டம் கிடைத்து 5 ஆம் வருடத்தில் நபித்தோழர்கள் ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள அபிஷீனியாவுக்குச் சென்ற ஹிஜ்ரத் இஸ்லாமிய வரலாற்றில் முதல் ஹிஜ்ரத் என அழைக்கப்படுகிறது. இதில் கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
2. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மனைவியருள் ஒருவர் அபூ சுபியானின் மகளாவார். அவர் யார்?
3. பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலுக்கு அத்திவாரம் இட்டவர்கள் நபி தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள். இதனைக் கட்டி முடித்த நபியின் பெயர் என்ன?
4. 'பக்கீர்' என்பதன் அர்த்தம் என்ன?
5. 'ஜம்முதக்தீம்' என்றால் என்ன?
6. ஹிஜ்ரத் புறப்பட்டபோது குறைஷியர் இவரைத் தடுத்தனர். இதனால் தம்மிடமிருந்த எல்லாச் சொத்துக்களையும் குறைஷியரிடம் கொடுத்து விட்டுத் தன்னை விடுவித்துக் கொண்டு ஹிஜ்ரத் சென்ற ஸஹாபி. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமக்குப் பின்னர் வேறு கலீபா ஒருவரை நியமிக்கும் வரையில் மஸ்ஜிதுன் நபவியில் இமாமாக இருந்து தொழுகை நடத்த வேண்டுமெனத் தமது மரணத் தறுவாயில் சொல்லி வைக்கப்பட்டவர். இந்த ஸஹாபியின் பெயர் என்ன?
7. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மிஹ்ராஜ் பிரயாணத்தின் போது 7 வானங்களிலும் சந்தித்த நபிமார்களைக் கூறுக?
8. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மகளான அன்னை ஹப்ஸா நாயகி அவர்கள் எத்தனை ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள்?
9. ஈமான்; சுருக்கமான ஈமான், விரிவான ஈமான் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுருக்கமான ஈமான் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
10. முஸ்னத் என்ற கிரந்தத்தை எழுதியவர் யார்?
11. ஷிர்க் என்றால் இணைவைத்தல் எனப் பொருள்படும். இது பெரிய வகை, சிறிய வகை என இரண்டாகப் பிரிக்கப்படும். இதில் பெரிய ஷிர்க் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
12. ஷபா அதுல் குப்ரா என்பதன் கருத்து என்ன?
13. ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்க்கையில் ஆமுல் ஹுஸ்ன் (துக்க ஆண்டு) எனக் குறிப்பிடப்படும் ஆண்டு நுபுவ்வத்தின் எத்தனையாம் ஆண்டாகும்?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. ஸயரே நாட்டின் பழைய பெயர் என்ன?
2. இலங்கையின் முதலாவது முஸ்லிம் சிவில் சேவையாளர், 1942, 43 காலப் பகுதியில் கல்முனையில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றியவர், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அதிபராக இருந்தவர். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்னாரின் பெயர் யாது?
3. அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை 01.11.1941 இல் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தவர் யார்?
4. அமெரிக்க சுதந்திரப் போராட்டம் வெற்றி பெற்ற ஆண்டு எது?
5. ஆங்கிலப் புரட்சி நடைபெற்ற ஆண்டு எது?
6. ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய எதிராளி கொரில்லாத் தலைவராக இருந்து கொலை செய்யப்பட்டவரின் பெயரைக் கூறுக?

(விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# الأَمَانَةُ

وَجَدَ عَامِرٌ فِيْ المَدْرَسَةِ قَلَمًا غَالِيًا، فَأَخَذَهُ، وَسلَّمَهُ إِلَى مُدِيْرِ المَدْرَسَةِ ، فَشَكَرَهُ، وَلَمَّا وَقَفَ التَّلَامِيْذُ صُفُوْفًا سَأَلَ المُدِيْرُ عَنْ صَاحِبِ القَلَمِ وَسَلَّمَهُ إِيَّاهُ، وَمَدَحَ المُدِيْرُ عَامِرًا لِأَمَانَتِهِ، وَقَدَّمَ لَهُ كِتَابًا هَدِيَّةً لَهُ.

ஆமீர் பாடசாலையில் பெறுமதியான பேனையொன்றை கண்டெடுத்து பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தான். அதிபர் ஆமிருக்கு நன்றி தெரிவித்தார். மாணவர்கள் அணியாக நின்றபோது பேனை உரிமையாளரை வினவி உரியவரிடமே அப்பேனாவை அதிபர் ஒப்படைத்துவிட்டு, ஆமீர் நம்பிக்கையாக நடந்து கொண்டதற்கு அவனைப் புகழ்ந்து பரிசாக அவனுக்கு ஒரு புத்தகத்தை அன்பளிப்புச் செய்தார்.

## இணைக்குக...

| الأَسْئِلَةُ | الأَجْوِبَةُ |
|---|---|
| ١. مَنْ وَجَدَ قلَمًا؟ | قَدَمَ المُدِيْرُ لِعَامِرٍ كِتَابًا |
| ٢. هَلْ وَجَدَ عَامِرٌ قلَمًا فِيْ الطَّرِيْقِ؟ | يَدُلُّ عَمَلُ عَامِرٍ عَلَى أَمَانَتِهِ |
| ٣. هَلْ كَانَ القَلَمُ غَالِيًا أَمْ رَخِيْصًا؟ | نَعَمْ، وَجَدَ المُدِيْرُ صَاحِبَ القَلَمِ |
| ٤. إِلَى مَنْ سَلَّمَ هَذَا القَلَمَ؟ | سَأَلَ المُدِيْرُ عَنْ صَاحِبِ القَلَمِ عِنْدَ وُقُوْفِ التَّلَامِيْذِ |
| ٥. هَلْ شَكَرَ مُدِيْرُ المَدْرَسَةِ عَامِرًا؟ | إِذَا وَجَدْتُ سَاعَةً فِي المَدْرَسَةِ أُسَلِّمُهَا إِلَى مُدِيْرِ المَدْرَسَةِ |
| ٦. مَتَى سَأَلَ المُدِيْرُعَنْ صَاحِبِ القَلَمِ؟ | نَعَمْ، شَكَرَالمُدِيْرُ عَامِرًا |
| ٧. هَلْ وَجَدَ المُدِيْرُ صَاحِبَ القَلَمِ؟ | سَلَّمَ عَامِرٌ هَذَا القَلَمَ إِلَى مُدِيْرِ الْمَدْرَسَةِ |
| ٨. عَلَى أَيِّ شَيْئٍ يَدُلُّ عَمَلُ عَامِرٍ؟ | كَانَ القَلَمُ غَالِيًا |
| ٩. مَاذَا تَفْعَلُ إِذَا وَجَدْتَ سَاعَةً فِيْ المَدْرَسَةِ؟ | لَا، بَلْ وَجَدَ عَامِرٌ قلَمًا فِيْ المَدْرَسَةِ |
| ١٠. مَاذَا قَدَّمَ المُدِيْرُ لِعَامِرٍ؟ | عَامِرٌ وَجَدَ قلَمًا |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# كَيْفَ يَقْضِي بَسَّامٌ يَوْمَهُ الْمَدْرَسِيَّ.

يَسْتَيْقِظُ بَسَّامٌ مُبَكِّرًا صَبَاحَ كُلِّ يَوْمٍ، وَيَبْدَأُ يَوْمَهُ بِالْوُضُوْءِ وَالصَّلَاةِ وَتِلَاوَةِ الْقُرْآنِ، ثُمَّ يَغْتَسِلُ وَيَرْتَدِي زِيَّهُ الْمَدْرَسِيَّ ثُمَّ يَتَنَاوَلُ الفَطُوْرَ وَيَخْرُجُ مِنَ البَيْتِ وَيَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ.

عِنْدَمَا يَدْخُلُ الفَصْلَ يُسَلِّمُ عَلَى الزُّمَلَاءِ ، وَيَدْرُسُ الْحِصَصَ حَتَّى السَّاعَةِ الثَّانِيَةِ نَهَارًا. وَعِنْدَمَا يَسْمَعُ صَوْتَ الجَرَسِ يَسْتَعِدُّ لِلرُّجُوْعِ إِلَى الْبَيْتِ ثم يَحْمِلُ حَقِيْبَتَهُ وَيَخْرُجُ مِنَ الفَصْلِ وَيَعُوْدُ إِلَى البَيْتِ فِيْ السَّاعَةِ الثَّانِيَةِ وَالنِّصْفِ تَقْرِيْبًا.

பஸ்ஸாம் ஒவ்வொரு நாள் காலையிலும் நேர காலத்துடன் கண்விழித்து எழும்புகிறான். அவன் வுழு செய்து தொழுது குர்ஆன் ஓதி தனது அன்றைய தினத்தை ஆரம்பிக்கின்றான். அவன் குளித்துச் சுத்தமாகி பாடசாலை சீருடை அணிந்து காலை உணவு உண்ட பின்னர் வீட்டிலிருந்து புறப்பட்டு பாடசாலைக்கு செல்கிறான்.


பஸ்ஸாம் வகுப்பில் நுழையும்போது தனது அனைத்து சகபாடிகளுக்கும் ஸலாம் சொல்கிறான். பாடசாலை ஆரம்பித்ததிலிருந்து பகல் 2 மணி வரை அவன் பாடவேளைகளை கற்றுவிட்டு மணி ஒலி கேட்டவுடன் வீடு திரும்பத் தயாராகி தனது புத்தகப் பையை சுமந்து கொண்டு வகுப்பிலிருந்து வெளியேறி 2.30 மணியளவில் வீடு சென்றடைகிறான்.

## இணைக்குக...

| | |
|---|---|
| ١. مَتَى تَسْتَيْقِظُ أَنْتَ؟ | أُذَاكِرُ دُرُوْسِي مَعَ زَمِيْلِي بَسَّامٍ. |
| ٢. بِمَ تَبْدَأُ يَوْمَكَ؟ | أَسْتَرِيْحُ قَلِيْلًا بَعْدَ أَنْ أَرْجِعَ مِنَ الْمَدْرَسَةِ. |
| ٣. مَتَى تَتَنَاوَلُ الفَطُوْرَ | أَرْجِعُ إِلَى بَيْتِي فِيْ السَّاعَةِ الثَّانِيَةِ وَالنِّصْفِ تَقْرِيْبًا |
| ٤. مَتَى تَبْدَأُ مَدْرَسَتُكَ؟ | اَدْرُسُ دُرُوْسِي فِيْ الْمَدْرَسَةِ حَتَّى السَّاعَةِ الثَّانِيَةِ نَهَارًا |
| ٥. مَتَى يَذْهَبُ وَالِدُكَ إِلَى مَكْتَبِهِ؟ | نَعَمْ،أُسَلِّمُ عَلَى زُمَلَائِي |
| ٦. هَلْ تُسَلِّمُ عَلَى زُمَلَائِكَ؟ | يَذْهَبُ وَالِدِي إِلَى مَكْتَبِهِ فِيْ السَّاعَةِ الثَّامِنَةِ |
| ٧. إِلَى مَتَى تَدْرُسُ دُرُوْسَكَ فِي الْمَدْرَسَةِ؟ | تَبْدَأُ مَدْرَسَتِيْ فِيْ السَّاعَةِ السَّابِعَةِ وَالنِّصْفِ |
| ٨. مَتَى تَرْجِعُ إِلَى بَيْتِكَ؟ | أَتَنَاوَلُ الفَطُوْرَ فِيْ السَّاعَةِ السَّابِعَةِ. |
| ٩. هَلْ تَسْتَرِيْحُ قَلِيْلًا بَعْدَ أَنْ تَرْجِعَ مِنَ الْمَدْرَسَةِ؟ | أَبْدَأُ يَوْمِيْ بِالْوُضُوْءِ وَالصَّلَاةِ. |
| ١٠. هَلْ تُذَاكِرُ دُرُوْسَكَ وَحْدَكَ أَمْ مَعَ زَمِيْلِكَ؟ | أَسْتَيْقِظُ فِيْ الصَّبَاحِ البَاكِرِ. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# English With Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

The most blessed month just faded away and I hope that we all made maximum out of it. Still, I'm quite sure that many of us are not satisfied with the deeds we performed, we feel that we could have done them more effectively and with full spirit.

And friends, there are some others, who keep themselves in absolute control only in those 30 days and once the month is over, get back to their same routine.

Furthermore, certain people make a promise to themselves that next year; they would use the month of Ramadhan in the best of ways.

So, this issue is especially dedicated to all of us who experienced the above and some other feelings related to Ramadhan.

Dear friends, do you know that, it is one of the strategies of Shaithan in distracting the believers that he make us feel hopeless and dissatisfied after Ramadhan.

Shaithan, makes us make a false promise to ourselves that we would start up all new from next Ramadhan and hence prevents us from performing the deeds that we did during the fasting period.


Yet, it is important for us to know that these are all the plans of Shaithan and we ought to be alert in not falling into his trap.

What are we supposed to do?

- We should continue reciting the Qura'n, as we did, even after Ramadhan.
- We should keep on begging for forgiveness from Allah, everyday.
- We should keep on giving Sadaqa.
- We should keep on praying the Thahajjath and other sunnah prayers.
- We should have the habit of fasting during Mondays or Thursdays, even after Ramadhan.
- We should keep on being nice to people as we did in Ramadha.
- We should keep on performing meritorious deeds.

Above are a few tips that you all can follow, to keep away from Shaithan attacking you, after Ramadhan. I am sure you all would have come up with better plans in order to strengthen your Iman.

Now that we have cleared our slates with the forgiveness of Allah, let us try to begin a new journey free from evil deeds..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Abu Hurayrah (may Allah be pleased with him) reported that the Prophet (peace and blessings be upon him) said "Fasting is a shield; so when one of you is fasting he should neither indulge in obscene language nor should he raise his voice in anger. If someone attacks him or insults him, let him say: "I am fasting!" "(Muslim)

## Laugh a while:

It was the end of the school year and Thariq's mother asked:

"And were the exam questions difficult?"

"They weren't bad at all,"

her son replied.

"It was the answers that gave me all the trouble."

Your Corner

## The power of words

Once upon a time a lion named Sharo, his wife lioness Susi and two small cubs Billi and Shera were travelling through the woods in the jungle. Suddenly, while crossing the woods Billi and Shera fell in to a trap led down by the hunters. Sharo and Susi got worried and saw around there was no sign of danger. They sat near the trap helplessly thinking that now they have lost their sons.

The cubs inside the ditch tried to come out of the trap, watching this, their parents asked them not to take pains and just sit there as there was no way out. But the two kept on trying hard to save their lives. Susi felt helpless and started crying and telling her sons that it was of no use, the ditch is too deep and it is impossible for them to come out.

But they still kept on trying, finally Billi took his mother's advice and surrendered himself to his destiny and sat there crying for his helplessness. However, Shera kept on trying and made a final jump with all his might and came out of the ditch and thus saved his life.


Shera was deaf, unable to hear what his parents were saying; he thought that they were encouraging him all the time. Thus he made his way out of the ditch.

Moral

The power of life and death is in the words. Encouraging words to someone who is down can lift him up and help him to make through it. As in this story, Shera, the lion cub thought that his mother was encouraging him to come out of the trap.

At the same time Billi heard those discouraging words from his parents and stopped trying. Thus destructive words to someone who is down can lead to their death.

So, be careful of what you speak. Speak promisingly to those who cross tour path.



Fathima Ilmiya Mohamad
Grade 7
BT/Aayisha M.M.V., Valaichenai




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Human Values

In the speedy materialistic race,
We have forgotten our grace,
We are running behind the glitters,
Due to which everyone suffers,
In going ahead one another,
We are pushing each other,
We have on human values,
Only cries and hues,
We have no heart,
Only the art
To cheat and to deceive
We can't bear,
The progress of other
What matters to us is
We, We and only We

Naheem Fathima Munshiha
Fathima Zahra L.A.C
O/L batch





# Making Choices

What will you choose? what will you be?
A doctor? A lawyer? An engineer?
A sculptor carving statues out of stones?
A potter turning clay upon a wheel?
Will you find a cure for the common cold
Or ride your bicycle around the craggy
Craters of the moon?
Will you be a music maker?
Who juggles notes in time
Or will you be a poet like me
To play with words and the art of rhyme.

**Fathima Ulfath Amany**
**Mohammed Musthafa**
**Muslim Ladies Arabic College**
**Kal eliya**

# Those winter Sundays

Sundays too, my father got up early
And put his clothes on in the blue back cold,
Then with cracked hands that ached
From labour I the weekday weather made
Banked fires blaze, no one ever thanked him.
I'd wake and hear the cold splintering, breaking
When the rooms were warm, he'd call
And slowly I would rise and dress
Fearing the chronic angers of that house
Speaking indifferently to him,
Who had driven out the cold
And polished my good shoes as well
What did I know, what did I know
Of love's austere and lonely offices?

**Sidhique Fathima Sajinis**
**Fathima Zahra Ladies Arabic College**
**Oddamavadi**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்




தலைநகரில் தலைநமிர்ந்து நிற்கும் தரமிக்க நூல்களின் தாயகமான இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிறுவனத்தின் இன்னொரு கல்விச் சாதனையாக வெளிவருகின்றது 'அறிவரசன்' எனும் அறிவுப்பேழை. ''சிறிது சிறிதாக செதுக்கப்படும் மாணவனே சிகரத்தை வெல்வான்'' எனும் பொன் மொழிக்கேற்ப புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு தரம் 03, தரம் 04, தரம் 05 என படிப்படியாக வழிகாட்டும் பணியை இந்நூல் சிறப்பாக மேற்கொள்கின்றது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மும்மொழி தேர்ச்சிகளுடன் கணிதம், சுற்றாடல், அழகியல், விளையாட்டுக்கள், இசைக்கருவிகள் என பல்வேறு திறன்களை வைத்து பிரபல ஆசிரியர் எம்.எம். முனாஸ் முஹம்மத் **(Dip in pri,BA,PGDE)** அவர்கள் இந்நூலை தொகுத்துள்ளார்.

இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிறுவனத்தின் ஏனைய வெளியீடுகளைப் போன்று இந்த நூலும் தரத்திலும் வடிவமைப்பிலும் சிறந்து விளங்குவதுடன் மாணவர்கள் சுவாரஷ்யமாக கற்கக் கூடிய பிரத்தியேக நுணுக்கங்களுடனும் உருவாக்கப்பட்டுள்ளது.

வரலாற்று நிகழ்வுகள், விளக்கப் படங்களுடனும் ஏனைய அறிவியல் விடயங்கள், அட்டவணைகளுடனும் தரப்பட்டிருப்பதும் மாணவர்களுக்கு இலகுவாக புரியும் அற்புதமான மொழி நடையில் விடயங்கள் தொகுக்கப்பட்டிருப்பதும் இந்நூலின் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய சிறப்பம்சங்களாகும்.

'அறிவரசன்' உங்களை அறிவால் ஆளும் அரசனாக மாற்றுவான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

**மேலதிக விபரங்களுக்கு**
இல. 77 தெமடகொட வீதி,
மருதானை, கொழும்பு 09.

**தொடர்புகளுக்கு:**
**0112 684851, 0112 669191**

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**


1. 16 (ஆண்கள் 12, பெண்கள் 4)
2. உம்முஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்
3. நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் (தாவூத் நபியின் புதல்வர்)
4. சீவியம் கழிக்க வழியற்றவன்
5. அஸரை லுஹருடைய நேரத்திலும் இஷாவை மஹ்ரிபுடைய நேரத்திலும் (முந்திய வக்தில்) முற்படுத்தித் தொழுவது
6. ஹஸரத் சுஹைப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
7. முதலாம் வானத்தில் ஆதம் நபியவர்கள்
   இரண்டாம் வானத்தில் யாஹ்யா நபியவர்களும் ஈஸா நபியவர்களும்
   மூன்றாம் வானத்தில் யூசுப் நபியவர்கள்
   நான்காம் வானத்தில் இத்ரீஸ் நபியவர்கள்
   ஐந்தாம் வானத்தில் ஹாரூன் நபியவர்கள்
   ஆறாம் வானத்தில் மூஸா நபியவர்கள்
   ஏழாம் வானத்தில் இப்றாஹீம் நபியவர்கள்
8. 60
9. ஈமான் முஜ்மல்
10. இமாம் அஹமத் பின் ஹம்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்
11. அஷ்ஷிர்குல் அக்பர்
12. பெரிய மன்றாட்டம்
13. நுபுவ்வத்தின் 10 ஆம் ஆண்டு

**பொது அறிவு**

1. கொங்கோ
2. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ்
3. **C.W.W.** கன்னங்கர அவர்கள்
4. 1776
5. 1688
6. அஹமட் ஷா மசூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணொருவ யுத்தம்

போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்யும் காலத்தில் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காகப் பல முறை படையெடுத்தனர். ஒவ்வொரு முறையும் அவர்களுக்குத் தோல்வியே ஏற்பட்டது. ஈற்றில் அவர்கள் கண்டியைக் கைப்பற்றுவதை மறந்துவிட்டு கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்து கொண்டே கண்டி இராச்சியத்துடனும் வர்த்தக ரீதியான தொடர்புகளையும் வளர்த்துக் கொண்டனர்.

மன்னன் செனரத் தனது இறுதிக் காலத்தில் கண்டி இராச்சியத்தை மூன்றாகப் பிரித்து தனது மூன்று மகன்களின் பொறுப்பில் கையளித்தான். மாத்தளைப் பிரதேசத்தை விஜேபாலாவுக்கும், ஊவாப் பிரதேசத்தை குமார சிங்கனுக்கும் கண்டியை இராஜசிங் கனுக்கும் வழங்கியிருந்தான். போர்த்துக் கேயரை இந்த நாட்டிலிருந்து எப்படியாவது விரட்டியடிப்பதே இராஜசிங்கனின் திட்டமாக இருந்தது. அதற்காக போர்த்துக்கேய மொழி கலாசாரங்களைப் படித்து, போர்த்துக்கேயப் பிரமுகர்களுடன் ஒருவிதமான தொடர்பையும் பேணி வந்தான்.

இந்தக் காலத்தில் ஒரு புதுமையான நிகழ்ச்சி நடைபெற்றது. கரையோரப் பிரதேசத்தில் வாழ்ந்த ஒரு போர்த்துக்கேயப் பிரமுகர் தனது நாட்டுக்கே சென்று விடத் தீர்மானித்தார். தனது நண்பனான கண்டிய இராஜசி ங்கனிடம் விடைபெற்று வருவதற்காக அந்தப் போர்த்துக்கேய வர்த்தகப் பிரமுகர் கண்டிக் குச் சென்றார். அவ்வாறு செல்லும்போது குதிரைப் பிரியரான இராஜசிங்கனுக்கு ஒரு நல்ல குதிரையையும் பரிசாக எடுத்துச் செல்ல அவர் தவறவில்லை. குதிரையைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட மன்னன் இராஜசிங்கன், தனது போர்த்துக்கேய நண்பனுக்கு ஓர் ஆண் யானையைப் பரிசாகக் கொடுத்தனுப்பினான். கொழும்பு திரும்பிய வர்த்தகரின் யானையைக் கண்டு அதன் மீது ஆசை கொண்ட தேசாதிபதி டியோகோடா மேலோ கண்டி அரசனிடமிருந்து வர வேண்டிய வரிக்கு இது சரியாய்ப் போகும் என்று கூறி யானையைக் கவர்ந்து கொண்டான்.

போர்த்துக்கேய வர்த்தகர் மீண்டும் கண்டிக்குச் சென்று இது பற்றி அரசனிடம் முறையிட்டார். அவருக்கு வேறொரு யானையைக் கொடுத்து சிலாபம் வழியாகக் கப்பலேறும்படி அறிவுரையும் கூறி அனுப்பினான் இராஜசிங்கன். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அழகிய தந்தமுள்ள யானைகளைப் பெற விரும்பிய தேசாதிபதி ஒரு குதிரை வியாபாரியிடம் விலையுயர்ந்த இரு குதிரைகளைக் கொடுத்து அதற்காக யானைகளை பரிமாறிக் கொண்டு வரும்படி கேட்டான்.

ஏற்கனவே வர்த்தகரின் யானையை அபகரித்தமையால் கோபமுற்றிருந்த இராஜசிங்கன், கண்டிக்கு வந்த குதிரை வியாபாரியை மடக்கி, குதிரைகளைக் கைப்பற்றும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டான். இதனால் கோபமடைந்த தேசாதிபதி பலரின் ஆலோசனைகளையும் பொருட்படுத்தாது கண்டி மீது படையெடுத்தான். 35,000 படை வீரர்களுடன் கண்டி மீது படை புறப்பட்டது. கண்டி மீது போத்துக்கேயர் படையெடுத்து வருகின்றனர் என்ற செய்தி கிடைத்ததும் அரசன் படைகளை ஆயத்தம் செய்தான்.

மாத்தளைப் பகுதியை ஆண்ட விஜயபால இளவரசனும் கண்டி மன்னனுக்கு உதவிக்குப் புறப்பட்டான். அவன் 10,000 படைவீரர்களை அனுப்பி வைத்தான். படை நெருங்கி விட்டதை அறிந்த கண்டி அரசன், ஒரு கத்தோலிக்கப் பாதிரியிடத்தில் ஒரு சிலுவையைக் கொடுத்து அதனூடாக தேசாதிபதிக்கு பின்வரும் செய்தியையும் அனுப்பி வைத்தான்: ''நீங்கள் வணங்கும், உங்களால் மரணிக்கும், உங்கள் கடவுள் செங்கடகல நகருக்கு உங்களை அனுப்பி வைக்காதிருப்பானாக. நீங்கள் கொழும்புக்குத் திரும்பிச் செல்லாவிட்டால் கடவுள் உங்களுக்குத் தண்டனை வழங்குவானாக'' என்பதே அந்தச் செய்தி. இந்தச் செய்தியை பார்த்த தேசாதிபதி கடுங்கோபமடைந்தான்.

இரண்டாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை அழிக்க ஓர் உபாயத்தைக் கையாண்டான் எல்லா மக்களையும் உடனடியாக இடங்களை விட்டு வெளியேறுமாறு கட்டளை பிறப்பித்தான். அரசனும் நிலம்ப என்ற இடத்தில் மறைந்திருந்தான். எந்த எதிர்ப்பும் இல்லாமல் கண்டியில் நுழைந்த மேலோவின் படை வீடுகள், கட்டடங்களைத் தீ வைத்துக் கொளுத்தியது. அரசர் பற்றிய எத்தகவலும் கிடைக்காமலேயே கொழும்பு திரும்பத் தீர்மானித்தது போர்த்துக்கேய படை. அன்றைய இரவைக் கழிக்க பேராதனைக்கு அண்மையிலுள்ள 'கண்ணொருவ' என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

கண்ணொருவ ஒரு பக்கம் மலையும் மறுபக்கம் மகாவலி ஆறும் கொண்ட ஒரு பள்ளத்தாக்கு ஆகும். மறுநாள் காலையில் கொழும்பு செல்லப் புறப்பட்ட போர்த்துக்கேயப் படையினர் மலைகளில் இருந்து இறங்கி வரும் கண்டிப் படைவீரர்களைக் கண்டவுடன் குழப்பமடைந்தனர். போர்த்துக்கேயப் படையைக் கண்டபடி தாக்கிய சிங்களப் படைகள் முழுமையாக அழித்தொழித்தனர். 33 பேரைத் தவிர மற்றைய அனைவரும் இறந்தனர். தேசாதிபதி மேலோ யுத்த களத்திலேயே இறக்க நேரிட்டது. மேலோவின் உடலைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் பாவித்த பெறுமதியான வாள் மட்டும் கிடைத்தது. அதனைப் பெற்றுப் பாதுகாத்த அரசன், பிற்காலத்தில் ஒல்லாந்த அட்மிரல் வெஸ்டஸ் ஹோல்ட் என்பவருக்கு பரிசாக வழங்கினான்.

இந்த கண்ணொறுவ யுத்தத்தின் மூலம் கண்டி இராச்சியததைக் கைப்பற்ற போர்த்துக்கேயரின் முயற்சி மீண்டுமொரு முறையும் படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்டது.

**இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்...**
தொடர் அடுத்த இதழில், இன்ஷா அல்லாஹ்.


# எண்ணங்களின் வண்ணங்கள் - 24

**தலைப்பு: நோன்புப் பெருநாள்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஆகஸ்ட் 10**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவ துடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு

## அற்ற இலங்கை தேசத்தை நோக்கி...

நாடு முழுவதும் டெங்கு பற்றிய பேச்சாகவே இருக்கின்றது. நாளுக்கு நாள் மரண ஓலங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. வைத்தியசாலைகளில் நோயாளிகள் தூங்க கட்டில்கள் இன்றி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசும் பொதுமக்களும் எவ்வளவுதான் முயன்றாலும் இலகுவில் கட்டுப்படுத்த முடியாத கொடூர அரக்கனாக இந்த டெங்கு தேசத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது.

உலக மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோய்களுள் 17 வீதமானவை தொற்று நோய்களாகும். இவற்றால் சராசரியாக ஆண்டுதோறும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் மரணிக்கின்றனர். இன்னும் பல மடங்கு மக்கள் வைத்தியசாலையில் தஞ்சமாகின்றனர். இவற்றில் டெங்கு மிகவும் பாரதூரமான நோயாகும். நாம் நினைப்பது போன்று இந்த கொடூர டெங்கு இன்று நேற்று தோன்றியதல்ல. கிறிஸ்து மறைந்து இரண்டு நூற்றாண்டுகளுக்குள் பிரபலமடைந்த சீன மருத்துவர்கள் தமது மருத்துவ குறிப்புக்களில் டெங்கு பற்றிய எச்சரிக்கை குறிப்புக்களை எழுதி வைத்துள்ளனர். படிப்படியாக வளர்ந்த டெங்கு, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இரத்த வெறி பிடித்து மக்களை வேகமாக காவு கொள்ளத் துவங்கியது.

இலங்கையில் இவ்வருடத்தில் மாத்திரம் 80203 பேர் டெங்குத் தாக்கத்திற்கு உட்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டடுள்ளனர். மரணங்களின் எண்ணிக்கை 225 ஐ தாண்டியுள்ளது.

| | |
|---|---|
| ஜனவரி | - *10927* |
| பெப்ரவரி | - *8722* |
| மார்ச் | - *13539* |
| ஏப்ரல் | - *12498* |
| மே | - *15208* |
| ஜுன் | - *19309* |

என டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது.

உலக அளவில் இதுவரையில் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் 2.5 பில்லியன் மக்களை இந்த டெங்கு பீடித்திருக்கின்றது. டெங்கு பீடித்த ஒருவரிடம் இருந்து சுகதேகியான ஒருவருக்கு டெங்கு வைரஸைக் கடத்தும் நோய்க்காவி நுளம்பு 'ஈடிஸ்' என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் இரண்டு வகையான ஈடிஸ் நுளம்புகள் மக்களுக்கு மரணத்தை அள்ளி இறைத்துக் கொண்டிருக்கின்றன. அவை ஈடிஸ் இஜிப்டி மற்றும் ஈடிஸ் அல்போபிக்டஸ் என்பனவாகும்.



கொழும்பு மாவட்டமே டெங்குவால் பாதிக்கப்பட்ட மிக முக்கிய பகுதியாகும். கொழும்பு மாவட்டத்தின் எட்டுப் பகுதிகள் டெங்கு எச்சரிக்கை வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## டெங்கு நோயின் அறிகுறிகள்

டெங்கு நுளம்பு கடித்து 4-10 நாட்களில் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும். சாதாரண காய்ச்சல் மட்டும் தோன்றி வேறு எந்தவித டெங்குக்கான அறிகுறியும் இல்லையென்றால் முதலாவது நாள் மாத்திரம் வைத்திய ஆலோசனையின்றி பெரசிட்டமோல் வில்லைகளைப் பாவிக்கலாம். ஆனால், தற்போதைய ஆபத்தான சூழலை கருத்திற் கொண்டு காய்ச்சல் வந்தால் உடனடியாக வைத்தியரை நாடுவதே மிகச் சிறந்ததாகும்.

## ஆபத்தான கட்டத்திலும் அவலத்துக்குரிய சில முட்டாள்தனங்கள்


டெங்குவின் பாரதூரத்தை சரியாக மதிப்பிடாததாலேயே அநேக மரணங்கள் சம்பவித்துள்ளன. டெங்குவையும் சாதாரண நோயாக மதிப்பிட்டு தனியார் கிளினிக்களில் மருந்து எடுப்பதும் வைத்தியசாலையில் அனுமதிக்க பின்வாங்குவதும் மிக பாரதூரமான முட்டாள்தனமாகும்.

மறுபக்கம், சமூக வலைத்தளங்களில் டெங்குக்கான கை மருத்துவங்கள் என்ற பதாகையில் பல போலி மருந்துகளும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. பப்பாசிச்சாறு போன்றவற்றைப் பயன்படுத்தினால் டெங்குவிலிருந்து பாதுகாப்புப் பெறலாம் என்று கூட போலிக் கருத்துக்கள் கூறப்பட்டன. இவற்றை நம்பியோ அல்லது அடுத்தவருக்கு எத்தி வைத்தோ ஒரு மரணத்திற்கு நாம் காரணமாகத் தேவையில்லை.

வைத்திய பரிசோதனையின் போது குருதி சிறுதட்டுக்களின் எண்ணிக்கை 150,000 வை விட குறைவதுடன் மொத்த வெண்குருதிக் கலங்களின் அளவு 4000 ஐ விட குறைவது டெங்குக்கான அடையாளமாக கொள்ளப்படுகின்றது.

### பாடசாலை மாணவர்களாகிய நாம் எவ்வாறு டெங்குவை ஒழிக்கலாம்


1. பாடசாலை சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல், டெங்கு பரவக்கூடிய பகுதிகளைத் தேடி அழித்தல்.
2. பாடசாலையின் காலைக் கூட்டம், மாணவர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் டெங்கு தொடர்பாக அறிவுறுத்தல்.
3. ஒவ்வொரு வகுப்பறையிலும் டெங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் சுலோகங்களைக் காட்சிப்படுத்தல்.
4. டெங்கு பற்றிய விழிப்புணர்வு நாடகமொன்றை பெற்றோருக்கும் மாணவர்களுக்குமாக அரங்கேற்றல்.
5. விழிப்புணர்வு ஊர்வலமொன்றை ஏற்பாடு செய்தல். அதில் டெங்கு பற்றிய விழிப்புணர்வு பதாகைகளையும் கோஷங்களையும் பயன்படுத்தல்.
6. டெங்கு எனும் உயிர்க் கொல்லியில் இருந்து பாதுகாப்புப் பெறும் வழிமுறைகள் குறித்து துண்டுப்பிரசுரம் ஒன்றை தயாரித்து விநியோகித்தல்.
7. வீடு வீடாகச் சென்று மக்களுக்கு அறிவுறுத்தல்.
8. பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து பணியாற்றல்.
9. பாடசாலையில், கிராமத்தின் முக்கிய பகுதிகளில் போஸ்டர்களைக் காட்சிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவேதத்துடன் ஓர் இளம் சாதனையாளர்

✍ வ. முஹம்மத் நபீல்

இருட்டுக் குகைக்குள் தத்தளிக்கும் குருட்டு ஆடுகளாக இருந்த ஜாஹிலிய சமுகத்தை உலகத்தை ஆளும் வல்லவர்களாகவும் உலகம் போற்றும் உத்தம உன்னதர்களாகவும் மாற்றியது அல்குர்ஆன். அறிவியல் சுவையும் ஆன்மிகத் தென்றலுமாக உலகை வலம் வரத் துவங்கிய அல்குர்ஆன், மனிதன் தான் படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து கொள்ள உதவியது. தன் கால்பட்ட தேசமெல்லாம் கண்ணீரற்ற கவிதை தேசமாக மாற்றியமைத்த மாறிலி அல்குர்ஆன்.

இலங்கை தேசத்தின் இளம் சாதனையாளர் ஒருவர் அல்குர்ஆனை மனனம் செய்யும் சர்வதேச போட்டியொன்றில் கலந்து கொண்டு தேசத்திற்கும் தனது கல்விச்சாலைக்கும் மகத்தான பெருமை பெற்றுத் தந்துள்ளார்.

துபாய் நாட்டில் நடந்து, சர்வதேச குர்ஆன் மனனப் போட்டியில் வெற்றி பெற்ற கண்டி மாவட்டத்தின் முன்மாதிரி மத்ரஸாக்களுள் ஒன்றான தஸ்கர ஹக்கானியா மத்ரஸாவின், *15* வயதான முஹம்மத் அர்க்கம் முஹம்மத் ஹுஸைன் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

அவருடனான உரையாடலை இங்கு தொகுத்து தருகிறோம்.

**அகரம்**: இந்த துறையில் கால் பதிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட காரணம் என்ன?

**முஹம்மத் அர்க்கம்**: நான் சிறுவயதில் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது அங்கு தொழுவித்துக் கொண்டிருக்கும் இமாமின் தோற்றத்தைக் கண்டு எனக்கும் அவ்வாறு ஒரு ஹாபிழாகவோ, இமாமாகவோ எதிர்காலத்தில் உருவாக வேண்டும் என்ற ஆசை ஏற்படும். அப்போது ஆழ்மனதில் துளிர்விட்ட ஆசைதான் இப்போது பெரிதாய் வளர்ந்திருக்கின்றது.

தரம் ஐந்தில் ஆசிரியர் எங்கள் கனவுகளைப் பற்றிக் கேட்டபோது, எதிர்காலத்தில் எல்லோரும் வைத்தியர், பொருளியலாளர் என தம் கனாக்களைக் கூறியபோது, நான் மட்டும் மௌலவியாக வர வேண்டும் என்றே எனது இலட்சியத்தைக் கூறினேன். மௌலவி என்றால் என்ன என்று விளங்காத அந்த ஆசிரியர், சக இஸ்லாமிய ஆசிரியரிடம் அதைப் பற்றிக் கேட்டு தெளிவடைந்துள்ளார். இந்த தகவல் தந்தைக்கு எட்டியபோது எனது கனவை நனவாக்கும் நோக்கோடு என்னை ஹக்கானியா மத்ரஸாவில் சேர்த்து விட்டார்.

இப்போது எனது வீட்டில் எனது இளையவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை முன்மாதிரியாகக் கொண்டு இறைவேதத்தை மனனம் செய்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக, எனது ஒன்பது வயது தம்பி முவாஸும் குர்ஆனை மனனம் செய்து முடித்துவிட்டார்.

**அகரம்:** உங்களைப் பற்றிக் கூறுங்கள்

முஹம்மத் அர்க்கம்: எனது குடும்பத்தில் பெற்றோரோடு சேர்த்து நாங்கள் ஏழு பேர். குடும்பத்தில் நான் மூத்தவன். மூன்று தங்கைகளோடு ஒரு தம்பியும் இருக்கின்றார். எனது ஆரம்பக் கல்வியை கம்பளை சர்வதேச பாடசாலையில் கற்றேன்.

**அகரம்:** இந்த சந்தர்ப்பத்தில் யாருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றீர்கள்?

**முஹம்மத் அர்க்கம்:** அளவற்ற அருளாளன் தந்த இன்னோர் அருட்கொடையாகவே இந்த வெற்றியைப் பார்க்கின்றேன். அவனுக்கே எல்லா புகழும் உரித்தாகட்டும், அல்ஹம்துலில்லாஹ். அடுத்ததாக எனது பெற்றோர்.

இப்போட்டியின் அறிமுகத்தை எனக்கு வழங்கிய உஸ்தாத் காரி ஆமிர் ஹாபிழ் அவர்கள் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். அதேபோன்று, எனது ஏனைய உஸ்தாத்மார்கள் மற்றும் இக்கல்லூரி நிர்வாகிகள் உறவினர்கள் அனைவருக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

**அகரம்:** உங்களது ஏனைய திறமைகள் பற்றிக் கூறுங்கள்

**முஹம்மத் அர்க்கம்:** அல்ஹம்துலில்லாஹ்! நாளொன்றுக்கு மூன்று பக்கங்கள் வீதம் ஒரு வருடத்துக்குள் முழு குர்ஆனையும் மனனம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. தற்போது பத்து வகையான கிராஅத்துக்களை ஓத முடிகின்றது. அதில் சிறப்புத் தேர்ச்சி பெற முயன்று கொண்டிருக்கின்றேன். பாடசாலைக் கல்வியிலும் சிறப்பாக இருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ், எதிர்காலத்தில் ஒரு மார்க்க வல்லுனராக உருவாகுவதே என் இலக்கு.

**அகரம்:** உங்களைப்போலவே சாதிக்க வேண்டும் என கனாக் காணும் அகரம் நண்பர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள் ?

**முஹம்மத் அர்க்கம்:** இதே துறையில் இன்னும் பல மாணவர்கள் சாதிக்க அவா கொண்டிருக்கலாம். அவர்களுக்கு நான் சொல்ல விரும்பும் அறிவுரை ஒன்றுதான்.

நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். விடாப்பிடியாக அல்லாஹ்விடம் கையேந்துங்கள், நிச்சயம் வெற்றி பெறலாம்.

---

குட்டிக் கதை

# செல்வம் என்றால் என்ன?

*"ஏழைகள் என்றால் யார்?" என தனது மகனுக்கு நேரடியாக உணர்த்த விரும்பிய செல்வந்தர், தனது மகனை ஏழை மக்கள் அதிகமாக வாழும் கிராமமொன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு இரண்டு நாட்கள் தங்கிய பின்னர் இருவரும் தம் மாளிகைக்கு திரும்பினர்.*


*தன் மகன் ஒழுங்காக புரிந்திருக்கின்றானா என்பதை அறிந்து கொள்ள அவர் தாம் சந்தித்த மக்களைப் பற்றி அவனிடம் விசாரித்தார்.*

*"உண்மையிலயே செல்வந்தர்கள் அவர்கள்தான் தந்தையே... நம்மிடம் சிறிய நீர்த்தாங்கி இருக்கின்றது. ஆனால், அவர்களிடம் பரந்த குளமும் சலசலக்கும் நதிகளும் உள்ளன. நமது வேலைகளைச் செய்ய ஒரு சில வேலைக்காரர்கள்தான் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களுக்கு உறவினர்கள், அயலவர்கள் என அனைவரும் உதவியாக இருக்கின்றார்கள். எமது வீட்டை இறப்பர் பூச்செடிகள் அலங்கரிக்கின்றன. ஆனால், அவர்களை அழகான இயற்கை காட்சிகளும் மேகங்களும் அலங்கரிக்கின்றன. எமது வீட்டை மின்சார விளக்குகள் ஒளியூட்டுகின்றன. ஆனால், அவர்களது இல்லங்களை ஆயிரக்கணக்கான விண்மீன்களும் அபூர்வ பௌர்ணமியும் ஒளியூட்டுகின்றன. அவர்கள்தான் செல்வந்தர்கள் தந்தையே...! நாம் அல்ல" என அர்த்தத்துடன் புன்னகைத்தான் அந்த அறிவுள்ள மகன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருகுவே
# URUGUAY



ஜனாதிபதி
தாபரே வசுகுயிச்யிசு

| | |
|---|---|
| தலைநகரம் | : மொண்டிவிடியோ |
| ஆட்சி மொழி | : எசுப்பானியா |
| விடுதலை தினம் | : ஆகஸ்ட் 28, 1828 |
| பரப்பளவு | : 1 75 016 km$^2$ |
| மக்கள் தொகை | : 3 ,463,000 |
| நாணயம் | : உருகுவே பீஸோ |

வடக்கே பிரேஸிலையும் கிழக்கில் அர்ஜென்டீனாவையும் ஏனைய பகுதிகளில் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் கொண்டிருக்கும் நாடு உருகுவேயாகும். ஏனைய நாடுகளைப் போலல்லாது இந்நாட்டு குடிமக்களில் அரைவாசிப் பேர் தலை நகரில் வசிக்கின்றனர்.

உருகுவே மூன்று விடயங்களுக்கு பிரசித்த மானது.

1. சர்வதேச அரங்கில் அமைதியான நாடொன்றாக திகழ்கின்றமை
2. பொருளாதார மற்றும் அரசியல் தன்மை மிக்க நாடாக திகழ்கின்றமை
3. கால்பந்தாட்டம்

மிக தொன்மையான வரலாறு உருகுவேக்கு உண்டு. சருவா எனும் பழங்குடிகளால் ஆளப்பட்ட அந்த அமைதியான பூமியை 16ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பிய காலனித்துவவாதிகள் ஆக்கிரமித்தனர். இறுதியில் அப்பகுதி முழுவதும் ஸ்பெயின் வசமானது.

ஸ்பெயினை அடுத்து உருகுவேயை பிரேஸில் கைப்பற்றியது. இறுதியில் மாண்டிவியோ உடன்படிக்கை மூலமாக 1828 ஆம் ஆண்டு உருகுவே முழுமையான சுதந்திரத்தை அடைந்து கொண்டது.

உருகுவே படிப்படியாக முன்னேற்றமடைந்த நாடு என்பதால் அதன் பொருளாதாரம் ஸ்திர தன்மையாக காணப்படுகின்றது. அதே போன்று, அரசியலும் ஸ்திரத்தன்மையாக இருக்கின்றது. அதனால்தான் மொத்த தேசிய உற்பத்தி துரித வளர்ச்சிக்கு உதாரணமாக காட்டும் அளவு அது வளர்ந்து கொண்டிருக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்:

சிறுவர்களின் ஆற்றல்களை ஊக்குவித்தல், அவர்களது ஆற்றல்களுக்கு களம் அமைத்தல், அவர்களது சிந்தனைகளை இஸ்லாமியமயப்படுத்தல், மாணவர்களது பாடசாலைக் கற்றலுக்கு மேலதிக உள்ளீடுகளை வழங்குதல், புதிய புதிய தகவல்களை வழங்குவதன் ஊடாக மாணவ வாசகர்களை வலுவூட்டுதல், 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழிகாட்டலை வழங்குதல் முதலான இலக்குகளைக் கொண்டதாக அகரம் மாணவர் சஞ்சிகை 2005 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது.

## சந்தா விண்ணப்பப் படிவம்

### JUST MEDIA FOUNDATION

Subscription Form

Receipt No:

Date:

Name: ..........................................................................

Address: ..........................................................................

..........................................................................

Tel: .............................. Mob: ..............................

E-mail: ..........................................................................

Profession: ..........................................................................

### PAYMENT DETAILS

| | 6 Month | Per Year |
|---|---|---|
| Alhasanath | 425.00 | 850.00 |
| Aharam | 400.00 | 800.00 |
| Prabodaya | 350.00 | 700.00 |
| The Trend | 1125.00 | 2250.00 |

சந்தாக்களை அனுப்ப JMF என்ற பெயருக்கு **MONEY ORDER** எடுத்து தபாலகம் **DEMATAGODA** என குறிப்பிட்டு அனுப்பவும்.

வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Just Media Foundation, A/C NO: 79088651, Bank of Ceylon, MARADANA.** எனும் வங்கிக்கணக்கில் குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு உரிய பற்றுச்சீட்டை **77, SRI VAJIRAGNANA MW, COLOMBO -09** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Just Media Foundation
77, Sri Vajiragnana Mw, Colombo -09
Tel: 011 2689324 | Fax: 0112686030
Email: jmflanka@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

எமது வெளியீடுகளில்
விளம்பரம் செய்து
நீங்களும் எமது
சேவையில்
பங்குதாரர்
ஆகலாம்...




# ADVERTISEMENT TARIFF

| Pages | ALHASANATH | | AHARAM | | PROBODAYA | | TREND | | ENGAL THESAM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT |
| FRONT | - | - | - | - | - | - | - | - | (TOP 2" X 4") | 3,000.00 |
| | | | | | | | | | (BOTTOM 2" X 10.5") | 5,000.00 |
| BACK | (10" X 7") | 60,000.00 | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (9.6" X 7") | 30,000.00 | (HALF 8" X 10.5") | 15,000.00 |
| | | | | | | | | | (QUARTER 8" X 5") | 7,500.00 |
| FRONT IN | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | - | - |
| BACK IN | (10" X 7") | 40,000.00 | (7" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | | |
| **INNER PAGES** | | | | | | | | | | |
| FULL | (9.4" X 7") | 20,000.00 | (9.4" X 6.5") | 12,000.00 | (9.4" X 6.5") | 10,000.00 | (8.6" X 6.2") | 15,000.00 | - | - |
| HALF | (4.7" X 7") | 10,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.3" X 6.2") | 8,000.00 | (8" X 10.5") | 10,000.00 |
| QUARTER | (4.7" X 3.5") | 6,000.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.3" X3.1") | 4,000.00 | (8" X 5") | 5,000.00 |
| COLUMN | (2" X 3.5") | 3,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.1") | 2,000.00 | (2" X 5") | 2,500.00 |
| COLUMN | (2" X 7") | 4,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.2") | 4,000.00 | (2" X10. 5") | 4,500.00 |

தொடர்புகளுக்கு:

0778942217 ☎ 0112689324

**JUST MEDIA FOUNDATION**

**No 77, Sri Vajiragnana Mawatha, Colombo-09**

JUST MEDIA FOUNDATION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05 ஆம் பக்கத் தொடர்...**

ஸாலிஹ் (அவர் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாகட்டும்) தனது கூட்டத்தாரை நோக்கி கூறினார்:

''எனது சமுதாயமே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனைத் தவிர வணங்கி வழிப் படுவதற்கு வேறு இறைவன் கிடையாது''

அன்னாருக்கு முன்பு ஹூதும் நூஹும் இதே வசனங்களையே தமது சமுதாயத்தைப் பார்த்துச் சொன்னார்கள். எல்லா இறைத் தூதர்களும் எந்த மாற்றமும் இல்லாது இதே வார்த்தைகளையே கூறினார்கள். ''எனது சமுதாயமே! நீங்கள் அல் லாஹ்வை வணங்குங்கள். அவனைத் தவிர வணங்கி வழிப்படுவதற்கு வேறு இறைவன் கிடையாது''

இறைத் தூதரின் தூது என்ன என்பது இந்த சில வார்த்தைகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இறைவனை நம்புவது இயல்பாகவே எளிமை யானதாகவும் இயற்கையானதாகவும் நல்லதாகவும் சத்தியமானதாகவும் இருக்கின்றது. ஆயினும் சமூக ரீதியில் அதற்கு புரட்சிகரமான ஓர் இயல்பு இருக்கின்றது. நடைமுறையில் முதலில் அது எல்லா கடவுள்களையும் நிராகரிப்பதைக் குறிக்கின்றது. படைப்புக்களின் தவறான நம்பிக்கையால் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா வணக்க வழிபாடு களையும் நிராகரிக்க வேண்டிய நிலை அடுத்து தோன்றுகின்றது. அதனுடன் தொடர்புடைய எல்லா விருப்பங்களையும் கைவிட வேண்டிவரும். சமூகத்தின் எல்லா விவகாரங்களையும் அடியோடு மாற்றி அமைக்க வேண்டி வரும். சமூகத்தின் அடிப்படைகளையும் கோட்பாடுகளையும் வணக்க வழிபாட்டு முறைகளையும் நடைமுறைகளையும் புனரமைப்பதையும் குறிக்கின்றது. அதாவது, பல தெய்வ விசுவாசத்தின் எல்லா விடயங்களையும் களைந்து ஏக தெய்வக் கோட்பாட்டை நிலை நாட்டுவதை அது குறிக்கின்றது. அத்தோடு, சிலரின் எதிர்பார்ப்புக்களும் தகர்ந்து போகும். இவர்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு இறை நம்பிக்கையாளர்களை எதிர்த்துத் தாக்க வருவார்கள்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்...)

**08 ஆம் பக்கத் தொடர்...**

**உக்கிப்போகும் உடல்**

ஆக, இத்தகைய பல்வேறு நிலைகளின் பின்பு படிப்படியாக உடலை நுண் கிருமிகளும் புழுக்களும் தின்று உடல் மக்கிப்போகும். நான்கு மாதங்களில் இறந்தவரின் உடலில் இருக்கும் மொத்த தசை களும் அழுகி, வெறும் எலும்புக்கூடு மட்டும்தான் மிஞ்சும். எழும்புப் பகுதிகள் மாத்திரம் பல வருடங்கள் வரை அப்படியே எஞ்சியிருக்கும். அதுவும் மிக மெதுவாக உக்கிக் கொண்டிருக்கும்.

**உடனே அடக்கி விடுங்கள்**

பொதுவாக இன்று முஸ்லிம் அல்லாதவர்கள் அவர்களில் யாரும் இறந்துவிட்டால் அவர்களது உடலை எம்பம் செய்து மூன்று நாட்களுக்கு வீட்டில் வைத்திருப்பார்கள். இதனால் இறந்திருக்கும் அவ்வுடலுக்கு மாத்திரமல்லாமல், சுற்றியிருப்ப வர்களுக்கும் பெரியதோர் அநியாயம் இழைக்கப் படுகின்றது என்பதை மேற்கூறிய பத்திகளைப் படிக்கும் உங்களால் ஊகிக்க முடியுமாக இருக்கும். இறந்தவர்களை கால தாமதப்படுத்தாது உடனே புதைத்து விடுவதுதான் அனைவருக்கும் சிறந்தது என்பதுதான் நவீன மருத்துவத்தின் முடிவு. இதனைத்தான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அன்றே கூறிவிட்டார்கள்.


உங்களில் ஒருவர் இறந்துவிட்டால் அவரது உடலை வீட்டில் வைத்துக் கொண்டிருக்க வேண்டாம். அவரது உடலை உடனே கப்றுக்கு எடுத்துச் செல்லுங்கள் (தபரானி)

**படிப்பினை**

அழகான தோற்றத்தில் படைக்கப்பட்டிருக்கும் உயிரினங்கள் அனைத்தினதும் இறுதி நிலை இதுதான். மனிதன் தனது அழகை வைத்து, கம் பீரமான தோற்றத்தை வைத்து, பட்டம், பதவி, அதிகாரம் என்பவற்றை வைத்தெல்லாம் உலகில் பெருமையடித்துத் திரிகின்றான். ஆனால், அவனது உடல் எத்தகைய அவலட்சணமானதொரு நிலைக்கு இறுதியில் தள்ளப்படுகின்றது என்று அவன் பார்க்க மாட்டானா? உக்கி மண்ணோடு மண்ணாகியதன் பின்பும் மனிதன் விட்டு விடப் படுவானா? அல்லாஹ் கேட்கின்றான் மனிதனின் எலும்புகளை ஒன்றுதிரட்ட மாட்டோம் என்று அவன் எண்ணுகிறானா? (75:3) வெறுமனே விடப்படுவான் என்று மனிதன் எண்ணுகிறானா? (75:36) இல்லை யாவற்றிலும் அதிகாரம் மிக்க அல்லாஹ் உருக்குலைந்து சின்னாபின்னமாகி, அழுகி, மக்கி, உக்கிப் போன இந்த உடலை அது இறக்க முன்பு எப்படி இருந்ததோ அதே அமைப்பில் எந்த வித்தியாசமும் இன்றி மீண்டும் உயிர்ப்பித்து எழுப்புவான். அவன் அத்துனை சக்தியும் அதி காரமும் வல்லமையும் மிக்கவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 22

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit), RICTP, MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

## பாடம் - 16

# தொடர்பாடல் முறையில் இணையத்தின் பங்கு

மனிதர்கள் சமூகம் சார்ந்து வாழும் இயல்பைக் கொண்டவர்கள். சமூகத்திலுள்ள தனிநபர்களுடனும் நிறுவனங்களுடனும் இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு தொடர்பாடல் இன்றியமையாததாயுள்ளது.

தொடர்பாடல் வழிமுறைகள் பண்டைய காலம் தொடக்கம் நடைபெற்று வந்துள்ளன. கால வளர்ச்சியுடன் தொடர்பாடல் முறைமைகளிலும் வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன. இன்றைய தொடர்பாடல் முறைமையில் அதிகம் கவர்ச்சியானதும் செல்வாக்குச் செலுத்தக் கூடியதுமாக அமைவது இணையத்தினூடான தொடர்பாடலாகும்.

1. இலத்திரனியல் கடிதங்கள் (மின்னஞ்சல்) &Email




இருவர் அல்லது ஒரு தொகுதியினருக்கிடையில் இலத்திரனியல் முறையில் கடிதங்கள் மற்றும் கோப்புகளைப் பரிவர்த்தனை செய்தலே மின்னஞ்சல் எனப்படும். குறிப்பிட்ட அளவு கொள்ளவு கொண்ட கோப்புக்களையே (files) மின்னஞ்சலினூடாக பரிமாற்றிக் கொள்ள முடியும். இந்தச் சேவையை இலவசமாக இணையத்தினூடாக வழங்கும் பல நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் gmail, yahoo, Hotmail போன்றன பிரபல்யமானவை. இணைய இணைப்புக்கு (Internet connection) மட்டுமே இங்கு செலவு ஏற்படும். இது தற்போதைய உலகின் மிக விரைவானதும் செலவு குறைந்ததுமான தொடர்பாடல் முறையாகும்.

உலகிலுள்ள எந்த நபரும் இணையத்தினூடாக மின்னஞ்சல் கணக்கு ஒன்றினை உருவாக்கிக் கொள்ள முடியும். இதன்போது வயதெல்லை அவதானிக்கப்படுகின்றது. இணையத்தில் பயன் படுத்தப்படும் மின்னஞ்சல் முகவரி பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்:

aharamipc@gmail.com
பயநர் பெயர் | ஆள்களப் பெயர்

மின்னஞ்சலிலுள்ள இயல்புகளை அறிந்து கொள்வதற்கு அகரம் சஞ்சிகையின் மின்னஞ்சல் முகவரியை நோக்குவோம். aharamipc@gmail என்பதே சஞ்சிகையின் மின்னஞ்சல் முகவரியாகும். இங்கு aharamipc எனப்படுவது பயநர் பெயராக அமைவதுடன் gmail.com ஆள்களப் பெயராகும். @ எனும் குறியீடு மூலமாக பயநர் பெயர், ஆள்களப் பெயர் ஆகியன வேறுபடுத்தப்படும்.

ஒருவர் மின்னஞ்சலைப் பயன்படுத்த முன்னர் அதற்காக மின்னஞ்சல் கணக்கை ஆரம்பித்தல் வேண்டும். மின்னஞ்சலை அனுப்புபவர், பெறுநர் ஆகிய இரு தரப்பினருக்கும் மின்னஞ்சல் முகவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருத்தல் கட்டாயமாகும். மின்னஞ்சல் கணக்கிற்கு மின்னஞ்சல் முகவரியும் **(email address)** கடவுச் சொல்லும் **(Password)** இருத்தல் அவசியமாகும். மின்னஞ்சலை அனுப்புவதற்கு அல்லது பெறப்பட்ட மின்னஞ்சல்களைப் பார்வையிட மின்னஞ்சல் கணக்கினுள் நுழைத்தல் வேண்டும். இதற்கென பயனர் மின்னஞ்சலை பயன்படுத்துவதற்கு இடை முகத்தில் பெயர், கடவுச் சொல் ஆகியவற்றை உட்படுத்தி **Sign in** மீது சொடுக்க வேண்டும்.

மின்னஞ்சல் கணக்கினை உருவாக்கும்போது ஏற்கனவே பாவனையிலுள்ள ஒரு மின்னஞ்சல் முகவரியும் வழங்கப்படுதல் வேண்டும். பின்னர் மின்னஞ்சல் கணக்கினுள் நுழையும்போது கடவுச் சொல்லை மறந்திருந்தால் அம்மின்னஞ்சல் முகவரியின் உதவியுடன் மீண்டும் உருவாக்கிய மின்னஞ்சலைப் பயன்படுத்த முடியும்.

மின்னஞ்சல் ஊடாகக் கடிதத்தை அனுப்பும் போது அறிந்திருக்க வேண்டிய விடயங்களை பின்வருமாறு நோக்கலாம்:

To எனும் இடத்தில் பெறுநரின் மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிட வேண்டும். **(fahimkffs@gmail.com)**

- **Cc (Carban copy)** என்னும் இடத்தில் கடிதத்தின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டியவர்களது மின்னஞ்சல் முகவரிகளை உள்ளீடு செய்தல் வேண்டும். **(eupdate@yahoo.com)**
- **Bcc (Blind Carbon copy): To, Cc** ஆகிய முகவரிகளில் உள்ளவர்கள் அறியாதவண்ணம்

  மின்னஞ்சலினை வேறு சிலருக்கு அனுப்ப வேண்டுமெனின் அப்போது மின்னஞ்சல் முகவரிகளை **BCC** எனும் இடத்தில் உள்ளிடுதல் வேண்டும். **(amani@sltnet.lk)**
- **Bcc** பிரதி கிடைப்போருக்கு **(amani@sltnet.lk)** இந்தக் கடிதம் அனுப்பப்பட்ட ஏனையவர்களது மின்னஞ்சல் முகவரிகள் அனைத்தும் தென்படும். எனினும், **To, CC** ஊடாக அனுப்பிய கடிதங்கள் பெற்றவர்களுக்கு **BCC** ஊடாகக் கடிதங்கள் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் முகவரிகள் காட்சியளிக்காது.
- **Subject** எனும் இடத்தில் கடிதத்தின் தலைப்பினை இடுதல் வேண்டும். இங்கு தலைப்பு சுருக்கமாகக் குறிப்பிடப்படல் வேண்டும். **(Aharam October Article)**
- **Attachment:** மின்னஞ்சலுடன் வேறு இலத்திரனியல் கோப்பு அல்லது கோப்புக்களை இணைத்து அனுப்புவதை இது குறிக்கின்றது. பின் போன்ற அமைப்பில் தென்படும் இடத்தின் மீது சொடுக்குவதன் மூலம் கோப்புக்களை இணைத்துக் கொள்ள முடியும். குறிப்பிட்ட கொள்ளளவுகளைக் கொண்ட கோப்புக்களையே மின்னஞ்சலினூடாக இணைத்துக் கொள்ள முடியும். கொள்ளளவு பெரிதாயின் வேறு முறைகளில் கோப்புக்களை பெறுநருக்கு அனுப்பி வைக்க முடியும்.
- **Send -** எனும் இடத்தில் சொடுக்குவதன் மூலம் மின்னஞ்சலை அனுப்பலாம்.
- **Inbox -** பெறப்பட்ட அஞ்சல்கள் சேமிக்கப் பட்டிருக்கும்.
- **Drafts -** அனுப்புவதற்கென தயார் செய்து முழுமைப்படுத்தப்படாத கடிதங்கள் சேமிக்கப் பட்டிருக்கும்.
- **Sent -** அனுப்பப்பட்ட கடிதங்கள் சேமிக்கப் பட்டிருக்கும்.
- **Trash / Deleted -** அழிக்கப்பட்ட கடிதங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு சேமிக்கப்பட்டிருக்கும்.
- **Spam / Junk -** தேவையற்ற கடிதங்கள் சேமிக்கப் பட்டிருக்கும், எமக்கு

அனுப்பப்படும் கடிதங்கள் வேறாக சேமிக்கப் பட்டிருக்கும்.

மின்னஞ்சல்கள் தற்போது தொடர்பாடலுக்குப் பெரிதும் துணைநிற்கின்ற ஒரு தொடர்பாடல் முறைமையாகும். இதன் தேவையும் பயன்பாடும் பெரிதும் உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளன. ஒரு குடும்பத்தினருக்கு வசிப்பதற்காக ஒரு முகவரியிருந்தாலும் அக்குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தனித்தனி மின்னஞ்சல் முகவரிகள் காணப்படுகின்றன. எமது இலத்திரனியல் கடிதங்களை பரிமாற்றிக் கொள்வதற்கு நாமும் மின்னஞ்சலைப் பயன்படுத்திக் கொள்வோம்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நன்றி மறவா நெஞ்சம்

ஐ.ஏ.எப். சுமையா
க/ஜாமிஉல் அஸ்ஹர் ம.க.

''உம்மா... உம்மா... எனக்கு பூவொன்று வரைந்து தாருங்கள், நிறம் தீட்டுவதற்கு'' என்ற தனது எட்டு வயது மகள் நிஹ்லாவின் பிஞ்சுக் குரல் கேட்டு திடுக்கிட்டாள் யோசனையில் ஆழ்ந்திருந்த ரமீஸா.

''ஆ... இந்தாங்க மகள்'' என்று அவள் கேட்டதை வரைந்து கொடுத்து ஒருவாறு மகளை அனுப்பி வைத்தாள் ரமீஸா.

மீண்டும் காலையின் நினைவுகளை இரை மீட்டத் தொடங்கினாள் ரமீஸா.

ரமீஸாவும் அவளது கணவன் நிஸாரும் புனித ஹஜ் பயணத்தை இரண்டாவது முறையாக மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தனர்.

ஆனால், காலையில் இடம்பெற்ற சம்பவம் அவளை சிந்திக்க வைத்தது. கணவன் நிஸார் வந்தவுடனேயே அதனைக் கூற வேண்டுமென முடிவு செய்தாள் ரமீஸா.

வழமைபோல காலையில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்த ரமீஸா, ஒருவாறாக தனது செல்ல மகள் நிஹ்லாவையும் பாடசாலை அனுப்பி விட்டு வீட்டு வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள்.

அப்போது வீட்டுக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. திறந்து பார்த்த பொழுது ஒரு நடுத்தர வயது ஆணும் பெண்ணும் நின்று கொண்டிருந்தனர்.

அவள் ரமீஸாவுக்கு ஸலாம் சொல்ல, ரமீஸா அதற்கு பதில் கூறினாள். பின்னர் அந்த ஆண் பேச ஆரம்பித்தான். ''எமது இரண்டு வயது மகளுக்கு தலையில் சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ள வேண்டும். அதற்கு பத்து இலட்சம் ரூபா செலவாகும் என வைத்தியர்கள் கூறுகின்றனர். நாமோ ஒரு நாளைக்கு ஒருவேளை சாப்பிடுபவர்கள். எம்மால் எப்படி பத்து இலட்சம்?'' என்றான்.

''இன்னும் ஒரு வாரத்தில் சத்திரசிகிச்சை செய்தாக வேண்டும். இல்லாவிடில் எமது மகள் இவ்வுலகை விட்டும் பிரிந்து விடுவாள். அவள் இல்லையென்றால் நாமிருவரும் வாழ்வதில் அர்த்தமே இல்லை.'' என்று கண்ணீர் ஆறாய் ஓட கூறினாள் அக்குழந்தையின் தாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமீஸா என்ன செய்வதென்று புரியாமல் திகைத்துப் போய் இருந்தாள்.

''உங்களால் முடிந்த உதவியை செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு பேரருள் புரிவான்.'' என்றான் அவன்.

வீட்டினுள் சென்ற ரமீஸா பல கனவுகளோடு ஹஜ் செய்ய வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள்.

''நீங்கள் செய்த உதவியை எமது உடலில் உயிர் இருக்கும் வரை மறக்க மாட்டோம். அல்லாஹ் உங்களுக்கு பேரருள் புரிவான்'' என்று கூறி சென்று விட்டார்கள்.

ரமீஸாவின் கணவர் நிஸார் மாலை ஐந்து மணியளவில் வீடு வந்து சேர்ந்தார்.

ரமீஸா தேநீர் ஊற்றிக் கொண்டு வந்து அவரின் முன்னால் வைத்தாள். ''உங்களிடம் ஒரு முக்கிய விடயம் பற்றிப் பேச வேண்டும்.'' என்றாள் ரமீஸா

''சொல்லுங்க'' என்றார் தேநீரை உறிஞ்சியவாறே.

''என்னை மன்னிக்க வேண்டும். உங்கள்ட கேட்காம ஒரு காரியம் பண்ணிட்டன். இன்டக்கி காலையில இரண்டு பேர் வந்தாங்க. புள்ளக்கி ஆப்ரேஷனாம் பத்து இலட்சம் தேவப்படுதாம். ஒரு கிழமைல சிகிச்சை பண்ணனுமாம். மனசு தாங்கல. ஹஜ்ஜு செய்ய வச்சிருந்த பணத்த... கொடுத்திட்டன். நாங்க ஏற்கனவே ஒரு தடவ ஹஜ் செஞ்சம்தானே'' என்றாள் ரமீஸா.

''ஆ! அப்படியா! சரி பறவல்ல. அவங்க புள்ளக்கி சொகமாகிறனும்னு துஆ செஞ்சிக்கங்க. நீங்க செஞ்சது ஒரு நல்ல காரியம். இதை என்ட கேக்கவா வேணும்.'' என்றார் நிஸார்.

❖ ❖ ❖

காலங்கள் உருண்டோடின.

ரமீஸாவும் நிஸாரும் தனது மருமகன் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தனர். வழியில் கார் விபத்துக்குள்ளானது. உடனே அருகில் இருந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ரமீஸாவுக்கு பெரிதாக ஏதும் காயம் இல்லை. நிஸாருக்குத்தான் கையில் பலமான அடி. உடனடியாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

தலைமை வைத்தியரை ரமீஸா சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது அவரின் தாயும் தந்தையும் வந்தனர். ரமீஸாவுக்கும் அவர்களிருவருக்கும் தாம் இதற்கு முன்பு எங்கேயோ சந்தித்ததான பிரமிப்பு. சிறிது நேரத்தின் பின்புதான் அடையாளங்கண்டு கொண்டனர்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தம்மிடம் பணம் கேட்டு வந்த தம்பதி என ரமீஸா அறிந்து கொண்டாள். பின்பு அத்தம்பதியினர் அவ்வைத்தியரிடம், ''நீங்க குழந்தையா ஈக்கிற நேரம் ஒங்கட ஒப்ரேஷனுக்கு ஒரு பெண் பணம் தந்ததா சொன்னமே அது இவங்கதான்'' என்று கூறினாள் அப்பெண்.

அவ்வைத்தியரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. ''நான் என்றாவது உங்களை காண வேண்டுமென்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்தேன். அல்லாஹ் எனக்கு காட்டிவிட்டான். அல்லாஹ் உங்கள் மூலம் அன்று அப்பணத்தை அளித்திரா விட்டால் இன்று நான் இல்லை. உங்களுக்கு என்றுமே நான் கடமைப்பட்டவள்''

''அல்லாஹ் எமக்கு செல்வத்தை பிறருக்கு உதவுவதற்காகவே வழங்கியுள்ளான். அதிலிருந்து உதவி செய்வது எம் கடமை'' என்றாள் ரமீஸா.

நீண்ட உரையாடலின் பின்பு நிஸாரை பரிசோதிக்க சென்றார் தலைமை வைத்தியர், ரமீஸாவையும் நிஸாரையும் தனது வாழ்நாளில் சந்திக்கக் கிடைத்ததே என்ற மனத் திருப்தியோடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விரைவு - உயர்வு - துணிவு

## 2018 ஆம் ஆண்டு ரி20 கிரிக்கெட் போட்டி நடைபெறாது

TM

கிரிக்கெட் ரசிகர்களுக்கு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் மீதான ஆர்வம் படிப்படியாக குறைந்து வருகிறது. ரி20 கிரிக்கெட் போட்டி கள் குறைந்த நேரத்தில் முடிந்து விடுவதாலும், அதிகளவில் சுவாரஸ்யம் இருப்பதாலும் ஐ.சி.சி. ரி20 கிரிக்கெட் உலகக் கோப்பையை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்த முடிவு செய்தது. அதன்படி தென்ஆபிரிக்கா (2007), இங்கிலாந்து (2009), மேற்கிந்திய தீவுகள் (2010), இலங்கை (2012), வங்காளதேசம் (2014), இந்தியா (2016) ஆகிய நாடுகளில் ரி20 உலகக் கோப்பை நடத்தப்பட்டது.

அடுத்த வருடம் ரி20 கிரிக்கெட் தொடர் நடத் தப்பட வேண்டும். ஆனால், முன்னணி அணிகள் தங்களுடைய இரு நாட்டிற்கிடையேயான தொடரில் அதிகளவில் விளையாட வேண்டியிருப்பதால் ரி20 உலகக் கோப்பை தொடருக்கான அட்டவணை யைத் தயார் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் அடுத்த வருடம் ரி20 கிரிக்கெட் நடத்துவதில்லை என்று ஐ.சி.சி. முடிவு செய்துள் ளது. 2018 இற்குப் பதிலாக 2020 இல் தொடரை நடத்த ஐ.சி.சி. முன்வந்துள்ளது. தொடர் எந்த நாட்டில் நடத்தப்படும் என்று இன்னும் முடிவாக வில்லை. தென்ஆபிரிக்கா அல்லது அவுஸ்தி ரேலியாவில் தொடர் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவர்கள்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர்களாக, டினேஷ் சந்திமால், உபுல் தரங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் தலைவராக இருந்த அஞ்சலோ மத்தியுஸ், தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே, புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள் ளன. இதன்படி, டெஸ்ட் அணியின் தலைவராக டினேஷ் சந்திமால் செயற்படவுள்ள அதேநேரத்தில், ஒருநாள் சர்வதேசப் போட்டி, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டி ஆகியவற்றின் தலைவராக, உபுல் தரங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

## புதிய டெஸ்ட் அணிகள்



டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்து பெற்ற அணி களாக அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் பெயரிடப்பட்டுள்ளன. குறித்த இரண்டு அணி களும் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் முழு மையான அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண் டுள்ளன. அத்துடன் இரு அணிகளும் டெஸ்ட் போட்டிகள் விளையாடும் தகுதிகளைப் பெற்றுள் ளதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிவித் துள்ளது. 11 மற்றும் 12 ஆவது டெஸ்ட் அணிகளாக அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. 2000 ஆம் ஆண்டில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி டெஸ்ட் அந்தஸ்து பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிய வேண்டிய விளையாட்டுத் தகவல்கள்


- ஒலிம்பிக் கொடியில் எத்தனை வளையங்கள் உள்ளன? 5 வளையங்கள்
- கிரிக்கெட்டில் இரு விக்கெட்டுகளுக்குள் உள்ள இடைவெளி? 22 Yds (யாட்ஸ் )
- செஸ் (CHESS) விளையாட்டு தோன்றிய நாடு? இந்தியா
- இந்தியாவில் முதல் டெஸ்ட் போட்டி எந்த இரு நாடுகளுக்கு இடையே நடைபெற்றது? இந்தியா - இங்கிலாந்து
- ஒலிம்பிக் கொடி எந்த நிறத்தால் ஆனது? வெண்மை நிற பட்டுத்துணி
- உலக கால்பந்து விளையாட்டின் நேரம்? 90 நிமிடங்கள்
- எந்த ஆண்டில் ஒலிம்பிக் கொடி அறிமுகமானது? 1920
- மரத்தன் ஓட்டப் பந்தயத்தின் தூரம்? 42.19 கி.மீ.




## சிம்பாப்வே அணியின் வரலாற்றுச் சாதனை

இலங்கை அணிக்கு எதிராக வரலாற்றில் முதல் தடவையாக சிம்பாப்வே அணி சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. கடந்த மாதம் அம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் நடைபெற்ற 5 ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், மூன்று விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி இந்த வரலாற்றுச் சாதனையை அதுவும் இலங்கை மண்ணில் படைத்தது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றது சிம்பாப்வே அணி.

## 22 ஆவது ஆசிய தடகள போட்டி




22 ஆவது ஆசிய தடகள போட்டி கடந்த ஜுலை 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தியாவின் ஒரிசா மாநிலத்தின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்வில் 46 நாடுகளில் இருந்து சுமார் 800 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியின் இலட்சினையாக ஆலிவ் ரிட்லி கடல் ஆமை தெரிவு செய்யப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் இப்போட்டியானது, 2015 சீனாவில் நடைபெற்றது. ஆசிய தடகள போட்டிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆசிய தடகள சங்கத்தால் (Asian Athletics Association) ஏற்பாடு செய்யப்படுகிறது.

பதக்கப் பட்டியலில் இந்திய முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டது. (தங்கம்: 12, வெள்ளி: 5, வெண்கலம்: 12 மொத்தம் 29) இரண்டாம் இடத்தினை சீனாவும் (தங்கம்: 8, வெள்ளி: 7, வெண்கலம்: 5 மொத்தம் 20) மூன்றாம் இடத்தினை கஸகிஸ்தானும் (தங்கம்: 4, வெள்ளி: 2, வெண்கலம்: 2 மொத்தம் 8) பெற்றுக் கொண்டன. இலங்கை அணி பதக்கப் பட்டியலில் ஒன்பதாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. (தங்கம்: 1, வெள்ளி: 4, வெண்கலம்: 0 மொத்தம் 5) 46 நாடுகளில் 22 நாடுகள் மாத்திரமே பதக்கப் பட்டியிலில் இடம்பிடித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். 23 ஆவது ஆசிய தடகள போட்டி 2019 இல் கத்தார் நாட்டில் நடைபெற இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைச் சரம்

## ஏனோ?

மனிதா!
விண்ணிலிருந்து வரும் மழை கொண்டு
சுத்தமடையும் நீ
விண்ணிலிருந்தே இறக்கப்பட்ட மறை
கொண்டு உன் மனம் அசுத்தமாய்
இருப்பது ஏனோ?

பல நூறு நூற்கள் கற்று
வாழ்வை மாற்றும் நீ
நூற்களுக்கெல்லாம் பெரும் நூலாய்
இருக்கும் மறை கொண்டு
மாறாமல் இருப்பது ஏனோ?

விஞ்ஞான விந்தைகளை
வியப்போடு கேட்கும் நீ
பல்லாண்டுகளுக்கு முன்னே அதிசயிக்க
அற்புதங்களை கூறிய மறையை
மறந்து வாழ்வது ஏனோ?

எல்லாமே ஏற்க துடிக்கும் உன் மனம்
மறையை மட்டும் மனதார
ஏற்று நடக்க வழிவிடுவதில்
ஏனோ
சிந்தித்துப் பார்!

**சம்ஹா பின்த் ரமீலா**
**தரம் 8**
**க/எனசல்கொல்ல ம.க.**
**தெல்தோட்டை**

## மரணமாய் சொன்ன மடல்

**எண்ணில்லா மனிதர்கள் - இவ்வுலகில்**
**வாழ்ந்திட - எனக்கென்று**
**உன்னிடத்தில் இடமொன்று தந்தாயே!**
**உன் அழகிய அடிமையாய்...**

**அன்பைத் தேடி அலைகிறதே**
**அகிலமெல்லாம் எம் இதயங்கள்**
**உன் அருள் இருப்பதை அறியாது**
**உணர வேண்டும் இறைவா**
**உன்னருள் உணர வேண்டும்**
**உரிமையுடன் உன்னிடம் இருகரம்**
**ஏந்த வேண்டும்**

**மண்ணுலகில் நானும்**
**முனாபிக்காய் வாழ்ந்து விட்டால்**
**மண்ணறைக்குச் சென்று - உன்**
**முகம் எப்படி நோக்குவேன்?**

**அருள் மழையில் நனைய வேண்டி**
**அனுதினம் ஏங்குகின்றேன் - இறைவா**
**அகிலம் எனக்களித்த**
**தவணைகள் முடியும் முன்...**

**பர்ஹானா றஹ்ளப்**
**கிமையா பெ.அ.கி.**
**கின்னியா**

## இரவு வானக் கடல்


ஆளில்லா இரவுக் குழியினிலே
ஆடி நிற்கும் வெண்நிலா குளிரினிலே
நாடெங்கும் மானிடர் உறங்கையிலே
நல்லொளி மெக்கு நீ தருகின்றாயே!

சாலை வீதி மயானமாய் ஆகையிலே
சாளரத்தின் பின்னே நீ ஒளிகையிலே
குள்ள நரி ஊளையிடுகையிலே
கார்கர் குகையின் பின் நீ மறைகின்றாயே!

நட்சத்திரக் கூட்டத்திலே
நல்லொளி வீசும் வெண்நிலவே
தேடிப் பகலவன் வருகையிலே
தென்படாமல் நீ இருப்பதும் ஏனோ?!

**சப்னா நிசவ்விர்**
**பெலந்த மு.வி.**
**அகலவத்த**

## பேசும் கவிதை - இல 27



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஆகஸ்ட் 10**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### முதலிடம் பெற்ற கவிதை

### கவனம்

இறுக்கமாய் பற்றிக் கொள்ளுங்கள்
இல்லையேல் இணைந்திருக்கும்
கைகளுக்குள்
ஒளிந்திருக்கும் சமாதானம்
காற்றில் கரைந்துவிடும்
கற்பூரமாய் மறைந்துவிடும்

**திருமதி பாஹிம்**
**கொழும்பு-13**

### சகோதரனே!

உன்னோடு அர்ஷின் நிழலில்
தரிக்க வேண்டும்
உன்னோடு சுவனம்
செல்ல வேண்டும்
அதுவரை உன்
கரம் கோர்த்து
நன்மைகளில் பாதையில் நானும்
பயணிக்க வேண்டும்

**பாசில் அஹமட்**
**அல்ஹுமைசரா ம.க.**
**பேருவளை**

### பெருநாள் வேண்டும்

இன்னொரு
பெருநாள் வேண்டும்
இங்கு
ஏழைகள் இல்லா
பெருநாள் வேண்டும்
இன்னொரு பெருநாள் வேண்டும்
இங்கு இயலாமையும்
இல்லாமையும் இல்லாத
பெருநாள் வேண்டும்

**நுஹா**
**தெல்தோட்டை**

### இன்னொரு பெருநாள்

இரத்த உறவுகளின் கைகளை
இறுக்கப் பற்றி
இன்னொரு பெருநாளில்
பதிக்கின்றோம் எம்மிறைவா!
இறுதிவரை இந்த உறவுகள்
உறுதியாக வேண்டும் எம்மிறைவா!

**ஸாஜிதா ஹஸீனா**
**மா/மின்ஹாஜ் மு.ம.வி.**
**நிககொள்ள**

### தொடரட்டும் அமல்கள்...

இன்னொரு நாள் நறுமணத்துடன்
விடிகின்றது
இதயம் முழுவதும்
இரைச்சல்கள் அடங்கி
இதமாய் மலர்கின்றது
மாதத்தில் செய்யப்பட்ட அமல்கள்
வருடம் முழுவதும் தொடரட்டும்

**பாத்திமா ஷாரா**
**பாத்திமா கல்லூரி**
**புத்தளம்**

### பாலகர்களே!

புத்தாடை புனைந்து
பூவின் இதழாய் புன்னகைத்து
புதிய ராகங்களுடன் பள்ளி செல்லும்
பாலகர்களே!
புதிய சரித்திரம் எழுதுவோம் வாருங்களேன்!

**ஸாஹிர்**
**அல்ஹுதா மு.ம.வி.**
**ரித்கம**

### எப்போதும் வேண்டும்...

புத்தாடை புனையும் நாளில்
புத்தாடைகளும்
புதுமணமும்
புன்முறுவலுமாக
கழியும் இப்பொழுது
எப்பொழுதும் வேண்டும் என்றே
ஏகனிடம் கையேந்துகின்றோம்

**பர்வின் நுஹா**
**ஸாஹிரா கல்லூரி**
**அனுராதபுரம்**

### தியாகங்கள் செய்து

காலடியில் வந்தது ரமழான்
கண்கள் திறக்கமுன்
கானலானது ரமழான்
தியாகத்தோடு
ரமழானை கழித்தவர்கள்
இந்த திருநாளை களிக்கின்றனர்

**முஹம்மத் பர்ஹான்**
**ஸாஹிரா கல்லூரி**
**மாவனல்லை**

### பாவங்கள் அகன்றனவே

பாரில் பாலகர்களாக நாம் வந்து
உதித்தோமே!
பனித்துளிகளாய் எம்மிதயங்கள்
தூய்மை கொண்டனவே!

**றஸா பாத்திமா**
**ஆமினா மகளிர் கல்லூரி**
**மாத்தளை**

### வெள்ளை உள்ளம்

வெள்ளை உள்ளமும்
கொள்ளை கொள்ளும்
புன்னகையும்
பூவில் அரும்பிய
பனித்துளியாய்
தூய்மை பொங்கும்
விழிகளும்
எந்நாளும் வேண்டும்
எங்கள் இறைவனே!

**ஆஸிக் அஹமட்**
**சம்மாந்துறை ம.க.**

### மணம் வீசும்

மனங்களில் மணம் வீசும்
இப்பெருநாளில்
எமது உறவுகளும்
ஊர்களும்
இஸ்லாமிய உணர்வுடன்
இனிதாய் கழிப்பதற்கு
எல்லாம் வல்ல இறைவனை
இறைஞ்சுகின்றேன்

**ஸதா ஜமன்**
**அறக்கியால**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ. முஹம்மத் நபீல்

# வரலாற்றுப் பாடத்தில் வரலாறு படைக்கலாம்!

வரலாறு மிகவும் சுவாரஸ்யமான பாடமாகும். நாம் கடந்து வந்த பாதையை மீட்டிக் கூறும் அழகிய கதைகளால்தான் வரலாறு எனும் பாடம் ஆக்கப்பட்டிருக்கின்றது. இதனால்தான் எமக்கு முன்வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களைத் தேடி அறிந்து கொள்வதே வரலாற்றுக்கான வரைவிலக் கணமாக வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்று பாடப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்ட, புரட்ட அவை ஏகப்பட்ட சுவாரஷ்யமான தகவல்களால் நிரம்பி வழிவதை நாம் காணலாம். இந்த அழகிய பூமியின் தோற்றம், அதில் வாழும் மனிதனின் தோற்றம். ஆரம்ப காலங்களில் வேட்டையாடிக் கொண்டு கற்குகை களில் மறைந்திருந்த மனிதன் இன்று எவ்வாறு உலகை ஆளும் வல்லமையை பெற்றான் என பல சுவாரஷ்யமான தகவல்களால் உருவாக்கப் பட்டதுதான் வரலாற்றுப் பாடம்.

**வரலாற்றைக் கற்கவும் வரலாற்றுப் பாடத்தில் மலையளவு புள்ளிகளை அள்ளிக் குவிக்கவும் சில வழிகள்...**

1. வரலாற்றுச் சம்பவங்களை கதைகளாக உருவ கப்படுத்தி ஆழ்மனதில் பதிய வைத்தல்

வரலாற்றுச் சம்பவங்களின் தொகுப்புதான் வரலாறு. ஆகவே, அந்த வரலாற்றுச் சம்பவங்களை கதைகளாக மாற்றி நம் மனதில் நீண்ட காலம் பாதுகாக்கலாம்.

2. புகைப்பட அல்பம் ஒன்றை தயாரித்தல்

இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் முத்திரைகளை சேகரிக்கும் பொழுதுபோக்கு மக்களிடம் பரவலாகக் காணப்பட்டது. அவ்வாறு சேகரிப்பவர்கள் ஒவ்வொருவரும் பெரியதொரு முத்திரை அல்பத்தை வைத்திருப்பார்கள். அதில் ஒவ்வொரு நாட்டு முத்திரைகளுக்குமாக ஒவ்வொரு பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு முத்திரை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் பொது அறிவில் வல்லவர் களாக இருப்பார்கள். எந்த நாடு எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது? அந்த நாட்டின் தேசிய கொடி யாது? அந்த நாட்டின் சுதந்திர தினம் எப்போது என ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் ஏகப்பட்ட தகவல்கள் அவர்களது மூளையினுள் நிரம்பி வழி யும். இதற்கு காரணம் அவர்களுக்கு முத்திரை களுடன் உள்ள பரீட்சயமே...!

நமது வரலாற்று புத்தகமும் நிறைய படங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பி வழிகின்றது. மனிதர்கள், கருவிகள், பிரதேசங்கள், விளக்கப் படங்கள் என ஒவ்வொரு பக்கமும் படங்களால்தான் நிரப்பப்பட்டுள்ளது.

ஆகவே, வரலாற்றுப் பாடத்தில் முதல் புள்ளியைப் பெற்ற அனைவரையும் ஆச்சரியப்படுத்த விரும்பும் ஒரு மாணவன் தனக்காக ஒரு புகைப்பட அல்பத்தை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். அவற்றை தலைப்பு ரீதியாக பிரித்து வகைப்படுத்தவும் வேண்டும்.

நீங்கள் ஒரு புகைப்பட அல்பத்தைத் தயாரிக்க இப்போது முடிவெடுத்து விட்டீர்கள் என்றால் மிகவும் சந்தோஷம். இந்த கணமே நீங்கள் வரலாற்றுப் பாடத்தை வெல்ல ஆரம்பித்து விட்டீர்கள்.

சரி, புகைப்பட அல்பத்திற்கான படங்களை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?

- பத்திரிகைகளில் இருந்து சேகரிக்கலாம்.
- இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் (Downlord) செய்யலாம்.
- நாமே வரைந்து நிறந்தீட்டலாம்.
- கல்விச் சுற்றுலா செல்லும்போது புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம்.

நீங்கள் சேகரித்த படங்களை தலைப்புக்களின் கீழ் பிரித்து உங்கள் புகைப்பட அல்பத்தில் இணைத்துக் கொள்ளுங்கள்.

மன்னர்கள்...

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |

வரலாற்றில் பிரபலம் பெற்றவர்கள்...

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |

இலங்கையின் வரலாற்றுப் பிரதேசங்கள்...
உலகின் வரலாற்றுப் பிரதேசங்கள்...
வரலாற்றில் பயன்படுத்தப்பட்ட கருவிகள்...

இவ்வாறு உங்களுக்கு தேவையான தலைப்புக்களில் புகைப்பட அல்பத்தை தயாரித்துக் கொள்ளுங்கள். புகைப்பட அல்பத்தின் அட்டையில் கம்பீரமாக நிற்கும் உங்கள் படத்தையோ அல்லது உங்களைக் கவர்ந்த ஒரு தலைவரின் படத்தையோ இணைப்பது உங்களை உற்சாகப்படுத்தக் காரணமாக இருக்கும்.

3. வரலாற்றுச் சொல் அகராதி

படங்களைப் போல நமது வரலாற்றில் பல புதிய சொற்களும் காணப்படுகின்றன. இவற்றை ஞாபகம் வைத்துக் கொள்ள உங்களுக்காக ஓர் அகராதியை உருவாக்கிக் கொள்ளுங்கள். உதாரணமாக;

ஒஸ்ரலோ பிதிகஸ் -
ஹோமோ ஹபிலிஸ் -
ஹோமோ இரெக்டஸ் -
ஹோமோ நியன்டதாலென்சிஸ் -
ஹோமோ சேபியன் -

இவ்வாறு நமக்கு பரீட்சயமில்லா சொற்களுக்கு உரிய பொருள்களை எழுதி அவற்றை தனி நூலாக தயாரித்துக் கொள்ளுங்கள்.

4. வரலாற்றுத் தலங்களைத் தரிசித்தலும் அருங்காட்சியகத்தைப் பயன்படுத்தலும்

இலங்கை வரலாற்றுச் சின்னங்கள் நிறைந்த நாடு. இலங்கையின் பெரும்பாலான பிரதேசங்களில் ஏதாவது ஒரு வரலாற்றுக் கட்டடமோ, சின்னமோ இல்லாமல் போகாது. உதாரணமாக; இலங்கையின் முதல் தலைநகரமாக அனுராதபுரத்தின் புனிதபூமி பகுதியில் புராதன விகாரைகள், பண்டைய கட்டடங்கள், பொய்கைகள், தூண்கள், சந்திரவட்டக் கற்கள், பரந்த வாவிகள், பழைய கட்டிடங்கள், அகழிகள் என ஏகப்பட்ட வரலாற்று ஆவணங்களை ஒரே இடத்தில் கண்டு கொள்ள முடியும்.

ஆகவே, வரலாற்றுப் பாடத்தை பாடநூலுடன் மாத்திரம் சுருக்கிக் கொள்ளாது நேரடியாக சென்றும் அவதானிப்பது வரலாற்றுப் பாடத்தில் நாம் சாதனையாளர்களாக திகழ இன்னுமின்னும் உதவி செய்யும்.

5. படக் காட்சிகளைப் பயன்படுத்தல்

உலகின் தோற்றம் முதல் முதலாம் இரண்டாம் உலகப்போர் உள்ளடங்கலாக பெரும்பாலான வரலாற்றுச் சம்பவங்கள் இன்று திரைப்படங்களாகவோ, வீடியோக்களாகவோ வெளிவந்து விட்டன. வெறும் பாடநூல்களில் கற்பதை விட வீடியோக் காட்சிகளில் இவற்றைக் கற்பது அவை நம் மனதில் இன்னும் ஆழமாகப் பதிய உதவும்.

6. வரலாற்று தினம், வரலாற்று மன்றம் போன்ற முயற்சிகளின் ஊடாக பாடபுத்தகத்தில் உள்ளவற்றை நம்வாழ்வின் ஓர் அங்கமாகவும் மாற்றலாம்.

வரலாறு தெரியாதவன் வரலாறு படைக்க முடியாது என கர்ஜித்தவர் ஐக்கிய அமெரிக்காவின் சமத்துவ புரட்சியாளர் மால்க்கம் X. அந்த வகையில் நாம் வரலாற்றைக் கற்பது வெறும் பாடப் புத்தகங்களுடனோ, பரீட்சைத் தாள்களுடனோ சுருங்கிப் போக மாத்திரமல்ல.

எமக்காக ஒரு வரலாற்றை நாம் படைக்கவும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பயன் படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் அமைத்து தரப்பட்டிருக்கும் சொத்துக்களையும் உடைமை களையுமே பொதுச் சொத்து என்கிறோம். நாங்கள் கல்வி கற்கும் பாடசாலை தொடக்கம் இன்னும் பல அனுகூலங்களை நாம் அனுபவித்து வருகி றோம். ஆனால், அதனைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கும் வழங்க வேண்டும் என்ற எண்ணம் நம்மத்தியில் அநேகருக்கு இல்லை. புத்தகங்களை கிழித்தல், கிறுக்குதல், கட்டிடங்களை உடைத்தல், துளையிடுதல், தேவையற்ற வாசகங் களை எழுதுதல், அசுத்தப்படுத்தல் போன்ற வீணான வேலைகளைச் செய்து, யாருக்குமே பிரயோசனம் அற்ற விதத்தில் நாம் நடந்து கொள்கிறோம். இதனால் நாம் பாவத்திற்குள்ளாகிறோம்.

மக்கள் அரசாங்கத்திற்கு செலுத்திய பணத்தைக் கொண்டே பெரும்பாலும் இந்த பொதுச் சொத்துக் கள் உருவாக்கப்படுகின்றன. அதனை நாமே நாசம் செய்தால் யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டதற்கு சமனாகிவிடும்.

1. மாணவர்களோடு தொடர்புபட்ட பொதுச் சொத்துத் தொகுதி.
   i. சந்தை, நூல் நிலையம், பாடசாலை
   ii. பாடசாலை, இலவசப் பாடநூல், பாடசாலை தளபாடங்கள்
   iii. பஸ் நிலையம், இலவசப் பாடநூல், சிறுவர் பூங்கா
2. பொதுச் சொத்துக்கள் உருவாக்கப்படுவது ?
   i. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் கிடைக்கும் பணத்தில்.
   ii. தனியார் வியாபாரத் தளங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில்.
   iii. மக்கள் அரசுக்கு செலுத்திய பணத்தில்.
3. மக்கள் பயன்பாட்டிற்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட பொதுச் சொத்துக்கள்.
   i. பஸ் நிலையம், சிறுவர் பூங்கா, நூல் நிலையம்.
   ii. வங்கி, சில்லறைக் கடை, திருமண மண்டபம்.
   iii. சந்தை, புகையிரத நிலையம், தனியார் பாட சாலைகள்.
4. நாம் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதன் அவசியம்.
   i. அது அரசாங்கத்தினுடையது என்பதனால்.
   ii. நாமும் நன்மையடைந்து எதிர்கால சந்ததி யினருக்கும் வழங்குவதற்காக.
   iii. அதனை யாரும் அனுபவிக்கக் கூடாது என்ப தற்காக.
5. பந்தியில் இடம்பெற்ற ஓர் உவமைத் தொடர்.
   i. அனுகூலங்களை நாம் அனுபவித்து வருகி றோம்.
   ii. பிரயோசனம் அற்ற விதத்தில் நாம் நடந்து கொள்கிறோம்.
   iii. யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டதற்கு சமன்.

**பின்வரும் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

| | | | |
|---|---|---|---|
| தெற்கு | மேற்கு | கிழக்கு | வடக்கு |

6. சூரியன் உதயமாகும்போது ............ வானம் சிவக்கிறது.
7. சூரியன் அஸ்தமனமாகும் போது .............. வானம் சிவக்கிறது.
8. உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடமுடி யுமா என்பதன் கருத்து ?
   i. உலைவாயை மூடியைக் கொண்டு மூடலாம்.
   ii. பலர் அறிந்த விடயத்தை மூடிமறைக்க முடி யாது.
   iii. வாயை மூடி வைப்பது மிக நல்லது.

**பின்வரும் சொற்களுக்கான விடைகளை பொருத் தமான இடங்களில் எழுதுக.**

| | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| ஓடுகின்றான் | 9...... | 10...... | 11...... | 12...... |
| கூவின | 13...... | 14...... | 15...... | 16...... |

**பின்வரும் வாக்கியங்களுக்கு மிகப் பொருத்தமான மரபுத் தொடர்களை தெரிக.**

17. கோலியாத் தன்னுடன் சண்டையிட வருமாறு வீரர்களை அழைத்தான்.
   i. ஆகாயக் கோட்டை ii. கைகொடுத்தல்
   iii. அறைகூவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அயராது உழைத்த வியாபாரி விடுமுறை தினத்தன்று நன்றாக தூங்கினான்.

i. கண்மலர்தல் ii. கண்வளர்த்தல்
iii. கண்திறத்தல்

பின்வரும் வினையடிகளை வைத்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை நிறைவு செய்க.

19. மாணவர்கள் பாட்டு (பாடு) ...............

20. நான் சிறுவனை (கடி) .................

மிகச் சரியான தொகுதியை தெரிக.

21. சவர்க்காரம், தலையணை, கோடரி
கைம்மாறு, காய்ச்சல், தேனீர்
இளநீர், வெண்ணீர், புடவை

22. நீட்டல் அளவைகளை ஒழுங்குபடுத்தி எழுதினால் பெறக் கூடிய ஒழுங்கு முறையை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

i. சென்றி மீற்றர், கிலோ மீற்றர், மீற்றர், மில்லி மீற்றர்
ii. மில்லி மீற்றர், சென்றி மீற்றர், மீற்றர், கிலோ மீற்றர்
iii. மில்லி கிராம், கிராம், கிலோ கிராம், கிலோ மீற்றர்

23. 150 கிராம் பருப்பின் விலை ரூபா 21.00 எனின், 2 கிலோ கிராம் பருப்பின் விலை யாது?

i. ரூபா 140.00 ii. ரூபா 280.00
iii. ரூபா 210.00 iv. ரூபா 380.00

24. 10, 15, 36, 16, 20, 40, 49, 50, 48 தரப்பட்ட எண்களில் எத்தனை சதுர எண்கள் காணப்படுகின்றன?

25. அடுத்து வரும் தசம எண்களை எழுதுக?

| | | | |
|---|---|---|---|
| 3.6 | 4.12 | 4.18 | ..... |


26. கார் ஒன்று மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீற்றர் தூரம் (சீரான வேகம்) செல்லும். 10 நிமிடங்களில் எத்தனை கிலோ மீற்றர் தூரம் செல்லும்?

i. 10 கிலோ மீற்றர் ii. 6 கிலோ மீற்றர்
iii. 20 கிலோ மீற்றர் iv. 30 கிலோ மீற்றர்

27. 4/7 இற்கு சமவலுப் பின்னத்தைக் கண்டுபிடித்து அதன் கீழ் கீறிடுக.

i. 8/15 ii. 12/21
iii. 4/14 iv. 20/30

28. இவ்வுருவில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?




i. 4
ii. 8
iii. 10
iv. 12

29. $\boxed{12 + 3 \times 3}$ கட்டத்திலுள்ள கணித செய்கைக்குப் பதிலான கணித செய்கையை தெரிவு செய்க?


i. 30+15 ii. 3+6
iii. 12×6 iv. 12×3

30. இப்பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை 60 எனின், அப்பண்ணையில் இருக்கும் கோழிகளின் எண்ணிக்கை யாது?




31. இப்பண்ணையில் உள்ள மொத்த பிராணிகளின் எண்ணிக்கை யாது?

32. A, B, C ஆகிய பாத்திரங்களில் காணப்படும் குளிர்பானத்தின் மொத்த கனவளவு யாது?




33. இலங்கையில் அதிகளவு மண்சரிவு, வெள்ளப் பெருக்கு என்பன ஏற்படும் மாவட்டம்?

i. இரத்தினபுரி மாவட்டம்
ii. கொழும்பு மாவட்டம்
iii. புத்தள மாவட்டம்
iv. காலி மாவட்டம்

34. படத்தில் காட்டப்பட்டுள்ள உடுத்தொகுதியின் பெயரை எழுதுக.



35. வானில் மழை பொழிய உதவும் முகில் கூட்டம் எது?

i. படை முகில்கள் ii. திரல் முகில்கள்
iii. கீற்று முகில்கள்

(44 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

1. பின்வரும் எத்தாவரத்தின் பூ, பட்டை, வித்து என்பன மருந்தாக பயன்படுகின்றன?
   i. புளி ii. அகத்தி
   iii. வேம்பு iv. துளசி

2. பறவைகளின் அலகில் ஒட்டிப் பரம்பலடையும் வித்து?
   i. மரமுந்திரி ii. குருவிச்சை
   iii. புலிநகம் iv. கடல்மா

3. கருப்பட்டி, பாணி, மா என்பன பெற உதவும் தாவரம்?
   i. பனை ii. தென்னை
   iii. கோதுமை iv. கித்துல்

4. வெண்டிப் பூவின் நிறம்?
   i. வெள்ளை ii. மஞ்சள்
   iii. சிவப்பு iv. ஊதா

5. அரலிப் பூவின் நிறம்?
   i. சிவப்பு ii. ஊதா
   iii. மஞ்சள் iv. வெள்ளை

6. ஓரங்களில் பற்கள் போன்ற அமைப்பு காணப்படும் இலை?
   i. வேம்பு ii. பலா
   iii. நெச்சி iv. முருங்கை இலை

7. அதிகளவு நீர் தேவைப்படாத ஒரு தாவரம்?
   i. நெல் ii. வாழை
   iii. நாகதாளி iv. கமுகு

8. புத்தகங்களுக்கு சேதம் ஏற்படுத்தாத பிராணி?
   i. எலி ii. கறையான்
   iii. இராமபாணம் iv. எறும்பு

9. தாவரப் பாகங்களை உணவாகக் கொள்ளும் பிராணி?
   i. நரி ii. கொக்கு
   iii. அணில் iv. சிலந்தி

10. தரையைக் கிளறி குழிதோண்டி முட்டையிடும் பறவை?
   i. காட்டுக் கோழி ii. சேவல்
   iii. கௌதாரி iv. வல்லூறு

இலக்கண வழுக்களுடைய வாக்கியங்களை திருத்தி எழுதுக?

11. மான் கூட்டம் காட்டுக்குள் ஓடிச் சென்றன.
12. சதீஷுடைய திறப்புக் கோர்வை தவறி விழுந்து விட்டன.

பின்வரும் சொற் கூட்டத்திற்கான தனிச் சொல்லை எழுதுக.

13. நூல் நூற்று உடைகளை தயாரிப்பவர்?
14. வறண்ட பிரதேசங்களில் தண்ணீர் கிடைக்கக் கூடிய இடம்?
15. உத்தமருக்கு யானையையும் மத்திமருக்கு தெங்கையும் அதமருக்கு கமுகையும் குறிப்பிடக் கூடிய பாடல் எது?
16. மக்களிலே பனை, தென்னை, வாழை என மூவகை மக்கள் உள்ளனர் எனக் குறிப்பிட்டவர் யார்?
17. பழங்காலந் தொட்டே எமது முன்னோர் கையாண்ட சொற்களை நாமும் பின்பற்றுவதற்கான சொல் யாது?

கீழ் காணும் இடைவெளிகளுக்கு மிகப் பொருத்தமான இணைமொழிகளை எழுதுக?

18. ………….. வாழ்ந்த இளைஞன் சில காலங்களுக்குப் பின் 19. ………….. காணப்பட்டான்.
20. நெல்லுக்கு நாற்று போல அரசு …………..
21. களிறுக்கு பிடி போல பேடுக்கு…………..
22. மயில் ………… போல வண்டு இரையும்
23. ஆட்டுக்கு புழுக்கை போல பறவைக்கு …………
24. பலாவுக்கு ………….. போல மாவுக்கு சதை
25. மாவுக்கு பிஞ்சு போல வாழைக்கு…………..

அடுத்து வரும் எண்களை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் நிரப்புக?

26. 7 3 14 6 21 9 ….. …..
27. பின்வரும் பின்னங்களை கழிக்குக.

   2/3 - 1/4 = …………

   3 5/10, 20/100 ஆகியவற்றை தசமத்தில் எழுதுக.

28. 3 5/10 = …………..
29. 20/100 = …………..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. 10 முதல் 20 வரையுள்ள தொடர் எண்களில் எத்தனை ஒற்றை எண்கள் உள்ளன?

31. 25 35 100 15 40 தரப்பட்ட எண்களில் ஐந்தாலும் பத்தாலும் மீதியின்றி பிரிபடும் எண்கள் எத்தனை உண்டு?

32. இவ்வுருவில் உள்ள வடிவத்தைச் சதுரமாக்குவதற்கு அதன் அகலப் பக்கத்துடன் மேலும் எத்தனை சென்றி மீற்றர் கூட்ட வேண்டும்?




33. தயார் செய்த சதுரத்தின் பரப்பளவைக் காண்க?

**கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி 7 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்கு முறையில் எழுதுக?**

27, 32, 24, 21 — 29, 28, 31, 63

34, 35, 39, 54 — 43, 44, 42, 17

34. 7 இன் மடங்கு

**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்க விடை தருக.**

போரில் காயப்பட்டவர்
புண்கள் தம்மை ஆற்றியே
பாரில் வாழ்வைக் கழித்தவள்
பண்பு மிகவும் உடையவள்
நல்ல மாதுப்றாரன்ஸ்
நைட்டிங் கேலைப் பற்றியே
சொல்லி வந்தேன் அவளது
தொண்டு என்றும் வாழ்கவே

35. இப்பாடல் யாரைப் பற்றியது?

36. பெண் என்பதற்கு பாடலில் இடம்பெற்ற சொல் யாது?

37. பாரில் வாழ்வைக் கழித்தவள் என்பதில் வந்துள்ள செயற்படுபொருள் யாது?

38. இரண்டாம் பாடல் வரிகளில் இடம்பெற்ற ஒருமை, பெயர்ச்சொல், உயர்திணைச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக?

39. வேண்டுமென்றால் =

40. தெருவோரம் =

**பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக?**

41. செய்வது + அறியாது =

42. அவர்கள் + இருவரும் =

43. பின்வரும் வாக்கியத்தில் உள்ள வினைச் சொல்லுக்குக் கோடிடுக.

நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஒரே நாட்டில் நடைபெறுவதில்லை.

44. பின்வரும் வாக்கியத்தினை ஒழுங்குபடுத்துக.

யார் - நவீன - தோற்றுவித்தவர் - போட்டிகளைத் - ஒலிம்பிக்

45. பின்வரும் பந்தியில் காணப்படும் சினைப் பெயருக்கு கோடிடுக.

ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளிப்பவை; சிந்திக்கும் ஆற்றலைத் துண்டுபவை; குறிப்பால் பொருள் உணர்த்தும் தன்மை கொண்டவை.

46. சார்ளஸ் பபேஜ் உருவாக்கிய மிக முக்கியமான சாதனம் யாது?

47. பின்வரும் வாக்கியங்களுள் படர்க்கை வாக்கியம் அல்லாதது.

i. அது தாவிச் சென்றது

ii. பாட்டனார் கதை சொன்னார்

iii. நாங்கள் எங்கே போவோம்

48. பின்வரும் வாக்கியங்களுள் மேற்கோள் வாக்கியம்

i. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்பது பழமொழி

ii. நான் யாது செய்வேன்

iii. நாம் எல்லோரும் ஆடிப்பாடுவோம்

49. பின்வரும் இரு வாக்கியங்களை ஒரு வாக்கியமாக்குக?

ஹசீப் தமிழ் பாடம் படிப்பித்தார்

ஹசீப் கணிதப் பாடம் படிப்பித்தார்

..............................................

50. நடந்து செல்லும்போது முதலில் நிலத்தில் பட வேண்டிய காற்பாகம்?

i. கட்டைவிரல் ii. விரல்நுனி

iii. குதிகால் iv. பெருவிரல்

51. பித்தளைப் பாத்திரங்களை துப்புரவாக்கி மினுக்குவதற்கு மிகப் பொருத்தமானது.

i. பழப் புளி ii. சுட்ட உமி

iii. தேங்காய்ப் பூ iv. சவர்க்காரம்

52. மீன்களில் அதிகளவில் அடங்கியுள்ள போசனை?

i. விற்றமின் ii. புரதம்

iii. விற்றமின் C iv. மாப்பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகள்**

1. iii
2. ii
3 iv
4. ii
5. iii
6. i
7. iii
8. iv
9. iii
10. iii
11. மான் கூட்டம் காட்டுக்குள் ஓடிச் சென்றது.
12. சதீஷுடைய திறப்புக் கோவை தவறி விழுந்துவிட்டது
13. நெசவாளி
14. சுனை
15. நீதிவெண்பா
16. கவிஞர் கண்ணதாசன்
17. மரபு
18. நோய் நொடியோடு
19. எலும்பும் தோலுமாக
20. கன்று
21. சேவல்
22. அகவும்
23. எச்சம்
24. சுளை
25. கச்சல்
26. 28,12
27. 9/12 = 3/4
28. 3.5
29. 0.2
30.
31. 5
32. 35 cm
33. 250 $cm^2$
34. 21, 28, 35, 42, 49
35. நைட்டிங் கேல்
36. மாது
37. வாழ்வு
38. மாது, நைட்டிங்கேல்
39. வேண்டும்+என்றால்
40. தெரு+ஓரம்
41. செய்வதறியாது
42. அவர்களிருவரும்
43. நடைபெறுவதில்லை
44. நவீன ஒலிம்பிக் போட்டிகளைத் தோற்றுவித்தவர் யார்?
45. கண்ணுக்கு
46. கணினி
47. iii
48. i
49. ஹசீப் தமிழ் பாடமும் கணிதப் பாடமும் படிப்பித்தார்
50. iii
51. i
52. ii

---

**(41 ஆம் பக்கத் தொடர்...)**

36. திசையறி கருவியில் காந்த ஊசி எப்பொழுதும் காட்டும் திசை.
    i. வடக்கு கிழக்கு ii. வடக்கு தெற்கு
    iii. வடக்கு மேற்கு iv. தெற்கு மேற்கு
37. இரு காந்தங்களின் ஒத்த முனைகள்...
    i. ஒன்றை ஒன்றை கவரும்
    ii. ஒன்றை ஒன்றை தள்ளும்
    iii. மேற்கூறியவை இரண்டும் பிழையான வையாகும்
38. நிலையான காந்தங்களின் வடமுனை...
    i. சிவப்பு நிறமாகக் காணப்படும்.
    ii. நீல நிறமாகக் காணப்படும்.
    iii. கறுப்பு நிறமாகக் காணப்படும்.

**விடைகள்**

1. ii
2. iii
3. i
4. ii
5. iii
6. கிழக்கு
7. மேற்கு
8. ii
9. உயர்திணை
10. ஆண்
11. ஒருமை
12. படர்க்கை
13. அஃறிணை
14. பலவின் பால்
15. பன்மை
16. படர்க்கை
17. iii
18. ii
19. பாடுகிறார்கள்
20. கடிக்கின்றது
21. i
22. ii
23. ii
24. 3
25. 4.24
26. i
27. ii
28. iii
29. i
30. 60
31. 240
32. 2500 ml
33. i
34. சிறுகரடி
35. ii
36. ii
37. ii
38. i



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு காணுதல்

## (Take time to dream)

எதிர்காலத்தில் தான் அடைய விரும்புகின்ற, சாதிக்க நினைக்கின்ற இலக்குகள், சாதனைகள், அடைவுகள் குறித்து கனவு காண வேண்டும். எமது இலக்கை அல்லது இலட்சியத்தை அடைந்து கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய முதல் எட்டு கனவு காண்பதாகும். அதற்காக நாளாந்தம் சிறிது நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அதனை நேரவிரயம் என்று சிந்திக்க வேண்டியதில்லை. மாற்றமாக, அதுவே இலக்கு நோக்கிய முதலாவது முதலீடாகும்.

இலக்குகள் தெளிவின்றி இருக்கின்ற நிலையில் மாற்றம், முன்னேற்றம் குறித்து எவ்வாறு அறிந்து கொள்வது? எனவே, இலக்குகளை மிகத் தெளிவாக வரையறுத்துக் கொள்வதுடன் அது குறித்து கற்பனை செய்வது, கனவு காண்பது அவசியம். குறித்த காலத்தில் நான் எந்த நிலையிலிருப்பேன், எவ்வாறான சாதனைகளை அடைந்திருப்பேன் என கற்பனை செய்ய வேண்டும்.

ஒரு முறை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மதீனாவிலே சில ஸஹாபா தோழர்களுடன் ஒரு வீட்டிலே ஒன்றுகூடியிருந்த வேளை, தோழர்களைப் பார்த்து உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "உங்களது விருப்பங்களை, ஆசைகளைக் கூறுங்கள்" எனக் குறிப்பிட்டார்கள். அப்போது தோழர்களில் ஒருவர், "இந்த வீடு தங்கத்தால் நிரம்பியிருந்து அதனை நான் அல்லாஹ்வின் பாதையில் முழுமையாக செலவளிக்க விரும்புகின்றேன்" எனக் குறிப்பிட்டார். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) மீண்டும், "உங்கள் ஆசைகளைக் குறிப்பிடுங்கள்" எனக் குறிப்பிட்டார்கள். அடுத்தவர், "நான் இந்த வீடு முழுவதும் முத்து, மரகதம், இரத்தினக் கற்களால் நிறைந்திருந்து அவை அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் செலவளிப்பதற்கு விரும்புகின் றேன்" எனக் குறிப்பிட்டார். மீண்டும் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "உங்கள் ஆசைகளைச் சொல்லுங்கள்" எனக் குறிப்பிட, அவர்கள் அனைவரும் "இதற்கு மேல் கூறுவதற்கு எமக்கு எதுவும் தெரியாது" என்றனர். அப்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "இந்த அறை அபூ உபைதா பின் ஜர்ராஹ், முஆத் பின் ஜபல், ஸாலிம் போன்ற மனிதர்களால் நிரம்பியிருப்பதனையும் இறைத் தூதை ஓங்கி ஒலிக்கச் செய்யும் பணியில் அவர்கள் எனக்கு உதவுவதையும் விரும்புகின்றேன்" எனக் குறிப்பிட்டார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய பெருநாள் வாழ்த்துக்கள்

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...)


**ஒரே கூரையின் கீழ்**
**தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...**

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப்புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...

Accepted:
MasterCard VISA AMERICAN EXPRESS

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.



IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைக்குள் மாத்திரம்)

**தினமும் காலை 8:00 மணியிலிருந்து இரவு 10:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்**

IBH
**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road | Maradana | Colombo- 09
Web: www.ibh.lk | Phone: 0115 925935

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org